★★
Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily
மலர் 8 (3-6-66) இதழ் 116

பராபவ வைகாசி 21 ஸபர் 13 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் ரைக்கிளீன் செய்வதும்



சன்லைட் டையேர்ஸ் அன் ரைக்கிளீனேர்ஸ்
(ராணித்தியேட்டருக்கு அருகாமை)
பெரியகடை யாழ்ப்பாணம்.
போன்: 474 தந்தி: ரைக்கிளீன்

### கட்ச் நீதிமன்ற விசாரணை

புதுடில்லி, ஜூன் 2

இந்தோ — பாகிஸ்தான் கட்ச்-ரன் தகராறில் கட்டாய மத்தியஸ்த கமிஷனிடம் இருநாடுகளும் தங்கள் வழக்குகளை சமர்ப்பிப்பதாய் கமிஷன் தலைவர் கூறினர். இரு தரப்பு வாதங்களும் செப்டம்பரில் கேட்கப்படும்.

# கூப்பனுக்கு யோர் துணி; இன்றுமுதல் கிடைக்கும்

## எந்தக் கடையிலும் எந்த துணியும் வாங்கலாம்

### அமைச்சரின் புதிய நடவடிக்கை

— நமது நிருபர் நடராஜா —

கொழும்பு

**இன்று முதல் துணிகளுக்கும் பங்கீட்டுமுறை அமுலுக்கு வருகிறது. கூட்டுறவுமொத்த விற்பனவு நிலையங்களிலும், இந்த ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற கடைகளிலும் மட்டுமல்ல, எந்தப்புடவைக்கடையிலும் யாரும் தங்கள் பங்கீட்டு அரிசிப் புத்தகங்களைக் கொடுத்து துணிகள் வாங்கலாம். ஒரு பங்கீட்டுப்புத்தகத்தின் ஒரு புள்ளிக்கு ஆறுயார்துணி வழங்கப்படும்.**

எல்லோருக்கும் சமமாகத்துணிகள் கிடைக்கவும் துணிகள் ஒரே இடத்தில் போய்ச் சேர்ந்துவிடாமலும், நடைபாதை வியாபாரிகள் விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை தங்களுக்குச் சாதமாக்கி துணிகளைத் தாங்களே வாங்கி லாபமடிக்காமலும் தடுக்குமுகமாகவே வர்த்தக அமைச்சர் இப்புதிய திட்டத்தை இன்றுமுதல் அமுலுக்குக் கொண்டுவருகிறார்.

இப்பொழுது பங்கீட்டரிசிப்புத்தகத்தின் புள்ளிக்குத் துணிகள் வாங்குவதற்கென அனுமதிக்கப்பட்டுள்ள புள்ளிக்கு இதுவரை துணிகள் வாங்கியவர்கள் இனி எந்தப் புள்ளிக்கு துணிகள் வாங்க முடியுமென்பது பற்றி விரைவில் வர்த்தகஅமைச்சு அறிவிக்கவிருக்கிறது.

தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் கூப்பனுக்குத் துணி வழங்க வேண்டும். துணிவழங்கப்படும் கூப்பன் புள்ளிகளை வர்த்தகர் சேர்த்து கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்திடம் கொடுத்துமீண்டும் துணிகொள்வனவு செய்ய வேண்டும்.

## கூ. மொ. வி.யிடம் இறக்குமதி உரிமை

இந்த வருடத்தின் பிற்பகுதி ஆறுமாதத்திலும் அதாவது ஜூன் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை ஜவுளி இறக்குமதி செய்யும் உரிமை கூட்டுறவு மொத்த விற்பனவுஸ்தாபனத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆறுமாதத்திலும் தனிப்பட்ட வர்த்தகர் ஜவுளி இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார். இவ்வருட இறுதிவரை தான் இறக்குமதி செய்யும் உரிமை கூ. மொ. வி. ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றாலும் இனி இந்த உரிமை இந்த ஸ்தாபனத்திடமே ஒப்படைக்கப்படுமென அறியப்படுகிறது.

## விருப்பினால் மேலும் சில நாள் பூட்டியிருக்கலாம்

பங்கீட்டு முறையில் பங்கீட்டரிசிப் புத்தகப் புள்ளிக்கு துணி வழங்குவதில் தனிப்பட்ட வர்த்தகர்களின் ஒத்துழைப்பை வர்த்தக அமைச்சர் டாக்டர் எம் வி பி பீரிஸ் கோரியுள்ளார் அரசாங்கத்தின் விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமுல் நடத்துவதில் ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்க முன்வரும் வரை இருப்பு எடுப்பதற்காக வென்றாலும் விலை நிர்ணயிப்பதற்காக வென்றாலும் சரி தனிப்பட்ட வர்த்தகர்கள் தங்கள் கடைகளைப் பூட்டி வைத்திருக்கவும் வர்த்தக அமைச்சர் அனுமதி வழங்கியிருக்கிறார்

## அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம்

விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு இயைய மறுக்கும் வர்த்தகர்கள் ஜவுளிகளைப் பதுக்கி வைத்தால் அவற்றை வெளியே கொண்டுவருவதற்கும் மற்றும் இதுபோன்றவர்த்தகர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் திடீர்ப் பரிசோதனைகள் நடத்துவதற்கும் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்க சேவையிலுள்ள ஒரு குறிப்பிட்ட தரத்திலுள்ள உத்தியோகத்தர்களை, விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளுக்கு உதவியாக, விலைக்கட்டுப்பாடு அதிகாரிகளாக நியமிக்கவும் அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## பெண்ணுக்கு ஒரு சேலைதானா?

ஒரு கூப்பன் புள்ளிக்கு ஆறுயார் துணிதான் வாங்க முடியுமானால் ஒரு பெண் தனக்குச் சேலை மட்டும் தான் வாங்க முடியுமென்றும் சட்டைத்துணி வாங்க முடியாதென்றும் குறைகூறுவதற்கு இடமிருக்காதென்றும் கணவரோ, குழந்தைகளோ தங்கள் கூப்பன்புள்ளிக்குரிய ஆறு யார் துணிகளையும் தங்களுக்கு உபயோகிக்கப் போவதில்லையென்றும் வர்த்தகஅமைச்சு அதிகாரியொருவவர் விளக்கம் தெரிவித்தார்.

## கிணற்றுக்குள் பாய்ந்து பெண்ணைக் காப்பாற்றினர்

### உதவிப் பொலிஸ் அதிபரின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், வியா.

கிணற்றுக்குள்விழுந்துஉயிருக்காகப்போராடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணை உதவிப்பொலிஸ் அதிபர் திரு. மகேந்திரன் காப்பாற்றியுள்ளார்.

நள்இரவு இரண்டு மணியளவில் வேலைமுடிந்துவீடுதிரும்பிய யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ்அதிபர் திரு. மகேந்திரனிடம் ஒரு சிறுபையன் பரபரப்போடு வந்து தனது தாயார் கிணற்றுக்குள் விழுந்துவிட்டதாகவும் உடனடியாக காப்பாற்றும்படியும் மன்றாடினார். வேலையிலிருந்து திரும்பியதால் களைப்புற்றிருந்த அதிகாரி சிரமத்தைப் பாராது ஸ்தலத்துக்குவிரைந்து சென்று பார்த்தபொழுது ஒரு பெண் 9 அடி தண்ணீருக்குள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனடியாக கிணற்றுக்குள் பாய்ந்து அப்பெண்ணை வெளியில் கொண்டுவந்து அவரது உயிரைக் காப்பாற்றினார். இச் சம்பவம் யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்துக்கருகாமையிலுள்ள ஒரு இடத்தில் நடைபெற்றது. காப்பாற்றப்பட்ட 50வயதுநிரம்பிய திருமதி ராஜாவிற்கு பொலிஸ் அதிகாரி முதல் உதவி அளித்தார்,

(ந.நி.)

## டெடிகம தேர்தல்மனு இன்று தீர்ப்பு

கொழும்பு. வியாழன்

இன்று டெடிகமைத் தொகுதி தேர்தல் ஆட்சேப மனு மீதான தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது.

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பார்லிமெண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து இம் மனு தாக்கல்செய்யப்பட்டது. இம்மனு பிரதம நீதியரசர் திரு. எம். ஸி. சன்சோனிமுன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

## ஆட்சேப மனு இன்று தாக்கலாகும்

கொழும்பு வியா

யாழ்ப்பாணம் மாநகர சபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து முன்னாள் மேயர் திரு அல்பிரட் துரையப்பா நாளை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்வார்.

## ஆட்சேப கூட்டங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகர சபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து வட்டாரங்கள் தோறும் பொதுக் கூட்டம் நடத்த வரியிறுப்பாளர்கள் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

வரியிறுப்பாளர்களின் முதலாவது ஆட்சேபக் கூட்டம் கொழும்புத்துறை வட்டாரத்தில் நாளை மாலை நடைபெறவிருக்கிறது.

மாநகரசபை கலைக்கப்பட்டதையிட்டு அதிருப்தியடைந்துள்ளதாகவும், விரைவில் மாநகரசபை தேர்தலை நடாத்தும் படியும் கோரி வரியிறுப்பாளர்களில் பலர், பிரதம மந்திரிக்கு தந்தி அனுப்பியுள்ளார்களென்றும் அறியப்படுகிறது.

## ரூ. 225 லட்சம் செலவில் பாலம்

பாட்னா, ஜூன் 2

ரூ 225 லட்சம் செலவில் சரயு நதிப்பாலத்தை ஸ்ரீமதி இந்திரா காந்தி இன்று திறந்துவைத்தார்.

## கப்பல் மூழ்கி 60பேர் மண்டனர்

சிங்கப்பூர், ஜூன் 2

இன்று சிங்கப்பூருக்கு அருகில் பிரயாணிகள் கப்பல் ஒன்று நீரில்மூழ்கி ஆழ்ந்து போனதால் 60 பேர்மாண்டு போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 40பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

## திருமண அழைப்பு

இராஜேந்திரன் சாரதா

திரு. T. M. வேலுப்பிள்ளையினதும் (தபால் அதிபர் மானிப்பாய்) திருமதி ஆயிலியம் வேலுப்பிள்ளையினதும் (தலைமை ஆசிரியை, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை) புதல்வன் செல்வன் இராஜேந்திரனுக்கும், காலஞ்சென்ற திரு. இராமச்சந்திரனதும் (இலங்கை புகையிரத சேவை) திருமதி இராமச்சந்திரனதும் புதல்வி செல்வி சாரதாவுக்கும் ஜூன் மாதம் 4-ம் திகதி இரவு 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில். இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் திருமணம் நடைபெறும்.

இவ்வைபவத்திற்கு உறவினர்களும் நண்பர்களும் பணிவுடன் அழைக்கப்படுகின்றனர்.

திரு T. M வேலுப்பிள்ளையும், பாரியாரும்
தபால் நிலைய அதிபர் வீடு,
மானிப்பாய்

4511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

நெசவுத் தொழில்

நெசவுத் தொழில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. விபரங்கட்கு:- மொகிடீன் அன் கோ, 63, காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம். 522

## விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கையில் 14 சுமானியார் வளவில் நான்கு (4) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மேற்படி விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 503

காணி

பெரியவிளான் தெல்லிப்பளை ரோட்டில் பெரிய விளானிலிருந்து 1/2 மைல் தூரத்தில் ரோட்டின் வலதுகரையிலுள்ள வீடு கட்டக்கூடிய கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு பொ. யோ. வேதநாயகம், ஒப்பால் கலத்தோட்டம், சும்மடுவ என்ற விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும். 507

தட்டச்சு

தமிழ் தட்டச்சு (Olivetti) புதியது விற்பனைக்குண்டு. விபரங்கட்கு T. குணரத்தினம், உபதபாற்கந்தோருக்கு முன்னால், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 520

## கல்வி

வகுப்புகள்

ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம் வகுப்புகள் திறமைவாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படும். ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 514

மோட்டார் யந்திரங்களில் பயிற்சி

மோட்டார் யந்திரங்கள் திருத்தவும் வாகனங்கள் செலுத்தவும் பயிற்சி பெற அரியம்ஸ் மோட்டார் யந்திரப் பாடசாலையில் இன்றே சேருங்கள். பூரணமாகவும் நுணுக்கமாகவும் கற்பிக்கப்படும். மோட்டார் விளையாட்டுக்கழகம், 15/1, மேல்மாடி, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 517


REGAL—JAFFNA
NOW SHOWING!
The World Famous
BEATLES
in
A Hard Day's Night

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
பேயா திலங்களில் 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர். - விஜயகுமாரி
நடித்த
நானும் ஒரு பெண்


## மீன்பிடித் துறைகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம், மயிலிட்டி, தொண்டமானாறு ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதுபற்றியும், குளங்கள் திருத்துவதுபற்றியும் ஒவ்வொரு பிரிவு காரியாதிகாரிகளும் சமர்ப்பித்த அறிக்கை நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழு கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் எம். பி.க்கள் கலந்து கொண்டனர்.


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - சந்திரகாந்தா
நடித்த
தெய்வத்திருமகள்



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவீஸ்
தெய்வத்தாய்


# அரிசி மானியம் பற்றி விவாதிக்கவேண்டும்

## ஆளும்கட்சிக் குழு கோரிக்கை

கொழும்பு, வியாழன்

அரிசி மான்யம் சம்பந்தமாக அரசாங்கத்தை இப்பொழுது எதிர்நோக்கியுள்ள பல்வேறு யோசனைகள் குறித்தும் விரிவான முறையில் விவாதிக்கவேண்டும் என்று பல அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் இந்த யோசனைகள் இடம் பெறுவதற்கு முன்பதாக இவை குறித்து ஒரு நாள் முழுவதும் பூரணமாக விவாதிக்கவேண்டுமென்று இவர்கள் கேட்டுள்ளனர்.

### யோசனைகள்

ஐந்து ஏக்கருக்கும் அதிகமான நெற்காணிகளை வைத்திருக்கும் குடும்பத்தினருக்கு பங்கீட்டரிசிப் புத்தகங்கள் வழங்கக் கூடாது என்று [illegible] மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. திரு. யெத்தீவ் சின்னலெப்பை கேட்டுள்ளார்.

கடந்த யுத்த காலத்தில் அமுலிலிருந்ததுபோல, தரவாரியாக பங்கீட்டரிசி விநியோகிக்கப்படவேண்டுமென்று செனட்டர் வீரவிமலரத்ன கோரியுள்ளார்.

வேலையாளுக்கு இரண்டு படி பங்கீட்டு அரிசியும் சாதாரணமானவர்களுக்கு ஒன்றரைப்படி பங்கீட்டு அரிசியும் குழந்தைகளுக்கு ஒரு படி அரிசியுமாக தரம் பிரிக்கப்பட்டு வழங்கப்படவேண்டுமென்று செனட்டர் விமலரத்ன விளக்கியுள்ளார்.

தமது யோசனையின் மூலம் ஒவ்வாரு வருடமும் 12 கோடியே 60 லட்சம் ரூபாவை சேமிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கயரோக நிவாரண

# "அரசாங்க நன்கொடை சீராகப்பயன்படுத்தப்படவில்லை"

சுழிபுரம், வியாழன்

"ஒரு ஜனநாயக நாட்டில் சுயமாக இயங்கும் சங்கங்களே உயிர்நாடியாகும். இத்தகைய சங்கங்களின் உதவியைப் பெறுவதால் நாட்டின் பல பிரச்னைகளை எளிதாக தீர்க்கலாம் என்பதை அரசாங்கம் உணராததையிட்டு ஆச்சரியப்படுகின்றேன்" என இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்கம் வலிகாமம் மேற்குக்கிளை பரிசளிப்புவிழாவுக்கு தலைமை வகித்துப் பேசிய சமூகஜோதி முதலியார் திரு. சி. தியாகராசா குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதிகளாக வைத்திய கலாநிதி ஜே. எச். எப். ஜெயசூரியா சர்வதேச கயரோக நிவாரண சமாச உறுப்பினர் டாக்டர் செல்வி எச். சி. கலோ ஆகிய இருவரும் கலந்துகொண்டனர்.

சமூகஜோதி சி. தியாகராசா மேலும் பேசுகையில், அரசாங்கம் தனித்து நின்று கயரோகத்தை ஒழிக்க முடியாது. கயரோகச் சங்கங்களும் தனித்து நின்று ஒன்றும் செய்ய முடியாது. எனவே இரண்டிற்கும் இடையே ஒற்றுமை அவசியமாகும். அரசாங்கம் செலவு செய்யும் பணம் உண்மையாக சீராக கயரோகிகளுக்கு பயன்படுத்தப்படவில்லை என்றார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட டாக்டர் ஜே.எச்.எப். ஜெயசூரியா பேசுகையில், கயரோகம் ஒரு கொடிய வியாதி. அது தன்னையும் கெடுத்து மற்றவர்களையும் கெடுத்துவிடும். இவ்வியாதியை அறிவு வளர்ச்சி மூலம்தான் இல்லாமல் செய்யலாம் என்றார்.

டாக்டர் எச். சி. கலோ பேசுகையில், எமது நாட்டில் கயரோகத்தைப் பரவாது தடுப்பதற்கு பள்ளிக்கூடங்களிலுள்ள ஒவ்வோர் சிறுவர்களுக்கும் கயரோக சம்பந்தமான அறிவை ஊட்டுகின்றோம். அதேபோல இங்கும் நடைபெறுவதை காண்கின்றேன். எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்பதால் நாம்பலநன்மைகளை அடைய முடியும் என்றார்.

திரு. இ. தணிகாசலம், டாக்டர்கள்: எஸ். இராசரத்தினம், அ. செல்வரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் பேசினர்.

## கமக்காரர் கவலை

சுழிபுரம், வியாழன்

இப்பகுதியில் பீடிப் புகையிலை உற்பத்தி செய்த கமக்காரர்கள் பெரும் ஏமாற்றமுற்று தாம் உற்பத்தி செய்த பீடிப் புகையிலையை விற்பனை செய்ய முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். இதுசம்பந்தமாக அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்றைத் தயாரித்துள்ளனர். கையிருப்பிலுள்ள பீடிப் புகையிலையை பக்குவப்படுத்தி வீடுகளிலும் வைக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை நீடிக்குமானால் வருங்காலத்தில் பீடிப்புகையிலைச் செய்கை மிகவும் குறையும்.

## மஹா கும்பாபிஷேகம்

சுழிபுரம், வியாழன்

சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வர ஆலய மஹாகும்பாபிஷேகம் இம்மாதம் 8-ந் திகதி புதன்கிழமை பகல் நடைபெறவிருக்கிறது. 4-ந் திகதி சனிக்கிழமை தொடக்கம் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. கடந்த சில வருடங்களாக கோவில் புனரமைப்புச் செய்யப்பட்டு தற்பொழுது [illegible] கும்பாபிஷேகத்திற்குப் பின் திருவிழாக்கள் நடைபெறும்

## நூல் வெளியீடு

சுழிபுரம், வியாழன்

வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் வருளை முருகமூர்த்தி கோவில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு 'அருள் படைத்த வேலவன்' என்ற பெயருடன் சிறு நூலொன்றை வெளியீடு செய்துள்ளனர்.

## "கியூபாவை ஆதரிப்போம்"

பீகிங், ஜூன் 3

அமெரிக்காவுக்கு எதிரான போராட்டத்தில் கியூபாமக்களுக்கு சீன மக்கள் ஆதரவு அளிப்பார்கள் என சீனா அறிவித்திருக்கிறது. கியூபாவுக்கு ஆதரவளிப்பதாக ரஷ்யாவெளியிட்ட அறிக்கை கபடத்தனமானது என்றும் அது கூறியிருக்கிறது.

# விளம்பரம்

பிரதேசக் கலைமன்றம்
யாழ்ப்பாணம்
கலைவிழா
ஆகஸ்டு 26—29-1966
(26-8-66 29:8-66

நிகழ்ச்சிகள்:

பகல்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஓவியம், சிற்பம், ஆபரணம், புகைப்படம், கைப்பணி, நெசவு, தையல், சிற்பிவேலைகள்பரம்பரைக் கைத்தொழில், சமையற்கலை, பாவைகள் ஆகியவற்றின் காட்சி.

இரவு: யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் சங்கீதம், நடனம், நாடகம் ஆகியன.

சகல விபரங்களுக்கும் கீழ்க்காணும் பொருத்தமான உபகுழுவின் தலைவருக்கோ அல்லது காரியதரிசிக்கோ எழுதவும்.

சங்கீதம்: திரு எஸ் பரம்ஏகலைராஜா, 146, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சங்கீத உபகுழுவின் காரியதரிசி)

நடனம்: திரு. என். சிவசிதம்பரம், A. A; சமூக சேவைப் பகுதிகச்சேரி, யாழ்ப்பாணம் (நடனஉபகுழுவின் தலைவர்)

நாடகம்: திரு. இ. சு. குமரையா, கச்சேரி, யாழ்ப்பாணம். (நாடக உபகுழுவின் காரியதரிசி)

கைப்பணி: திரு. எஸ். கந்தவனம், மாவட்ட அதிகாரி, கிராம அபிவிருத்தி, சிறுகைத்தொழிற் பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம். (கைப்பணி உபகுழுவின்தலைவர்)

ஓவியம், சிற்பம், புகைப்படம்: திரு. எஸ். யூ. சோமசேகரம், இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி, 43, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம், (ஓவியம், சிற்பம், ஆகிய உபகுழுவின் தலைவர்)

செ சிவஞானம்
யாழ்ப்பாண மாவட்ட பிரதேசக் கலைமன்றப் பொதுக்காரியதரிசியும், யாழ்ப்பாணக்காரியாதிகாரியும்.

காரியாதிகாரியின் அலுவலகம், யாழ்ப்பாணம்,
20-5-66. 435

## எமது ஸ்தாபனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை

மனேஜர்: முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், பிணைப் பணம் கட்டக்கூடியவர்களுக்கும் சலுகை அளிக்கப்படும்.

டிராக்டர் மெக்கானிக்குகள்:- விண்ணப்பதாரர்கள் தங்கள் தராதரத்தைக் குறித்து மனுப்பண்ணவும், பயிற்சியாளர்களாகச் சேரவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

திருச்செல்வம் அன் கோ.
ஆஸ்பத்திரி வீதி,
459 யாழ்ப்பாணம்.

## கேள்வி விளம்பரம்

இத்தால் சகலரும் அறியத்தருவது தெல்லிப்பழை கிராமசபைஅக்கிராசனரால் ஞாயிற்றுக்கிழமை (5-6-66) காலை 9-30 மணிவரை கீழ் காட்டிய வேலைக்கு சீல் வைத்த ரெண்டர்கள் அழைக்கப்படுகின்றன காகித உறையில் இடது பக்கமேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படவேண்டும். பத்திரத்தை ரூபா 55/- கட்டி கிராமசபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். வேறு விபரங்கள் கிராமசபை காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலையின் பெயர்

கிழானை ஒழுங்கை திருத்த வேலை.

த. செல்வரத்தினம்,
தலைவர்
கிராமசபை, தெல்லிப்பளை

கி. ச. காரியாலயம்
தெல்லிப்பளை-30-5-66 460

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் வியட்னும்

# கீயின் ராணுவ அரசாங்கத்தில் அரசியல், மதத் தலைவர்கள் சமபங்கு

## திங்கட்கிழமை 10 பேர் புதிதாக பதவி ஏற்பர் எனத் தகவல்

### தீக்குளிக்க முயன்ற 20 பௌத்த பிக்குகளும், பிக்குனிகளும் தடுக்கப்பட்டனர்

சைகோன், ஜூன் 2

தென்வியட்னுமில் கீயின் ராணுவ அரசாங்கம், ஆட்சியில் சிவிலியன்களுக்கும் சமபங்கு அளிக்க முன்வந்திருக்கிறது, வருகிற திங்கட்கிழமை 10 அரசியல் மதத்தலைவர்கள் அரசாங்கத்தில் பதவி ஏற்பர் என அறிவிக்கப் படுகிறது.

பிரதம மந்திரிக்கும் பௌத்த தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களைத்தொடர்ந்து இந்த முடிவு ஏற்பட்டது. முடிவு, பௌத்தர்களின் கூட்டம் ஒன்றுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது ஆனுல் பௌத்தர் கூட்டம் ஏகமனதாக இதை ஏற்கவில்லை. 20 பிக்குகளும், பிக்குனிகளும் தற்கொலை செய்து கொள்ள முயன்றுர்கள். தங்கள் மீது பெட்ரோலை ஊற்றிக்கொண்டு. தீ மூட்டிக்கொள்ள எத்தனித்தபோது அப்படிச்செய்வதிலிருந்து அவர்கள் தடுக்கப்பட்டார்கள்.

பின், பௌத்த இளைஞர்கள் கீ அரசாங்கத்துக்கு அமெரிக்கா அளிக்கும் ஆதரவை எதிர்த்து ஊர்வலமாகச் சென்றுர்கள். ஜனுதிபதி ஜோன்ஸனின் கொடும்பாவி ஒன்றையும் அவர்கள் எடுத்துச்சென்றுர்கள்.

ஹூவேயில் ஆயிரம் பௌத்த இளைஞர்கள் அமெரிக்க கான்ஸல் காரியாலயத்தைத் தாக்கி எரித்துவிட்டார்கள், இதேசமயம் வடவியட்னும் மீது கடும் அமெரிக்க விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. புதிய ரக குண்டு ஒன்றை அமெரிக்கா இத்தாக்குதலில் உபயோகித்தது என்றும் ஹானேய்க்கு வடமேற்கே 25 விமான எதிர்ப்பு பீரங்கிகள் முடமாக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

கடந்தசெவ்வாய்க்கிழமை 10 அமெரிக்க விமானங்கள் வடவியட்னும் மீது சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஹானேய் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

தென்வியட்னும் தேர்தலை நோக்கிச் செல்லும் முன்னேற்றம் தமக்கு திருப்தியளித்திருப்பதாய் ஜனுதிபதி ஜோன்ஸன் அறிவித்திருக்கிறுர். ——

## 'அமெரிக்க நிறவெறி' கிளே பாய்ச்சல்

கெய்ரோ, ஜூன் 2

அமெரிக்கர்கள் இனப் பாரபட்சம் கொண்டிருப்பதாக உலக அதிபார சாம்பியன் காஸியஸ் கிளே மத்திய கிழக்கு செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் கூறினுர்.

ஜனுதிபதி நாஸரைக் காணச் செல்லுமுன் கிளே இப்பேட்டியை அளித்தார். இஸ்லாமிய விவகார உயர் சபையின் அழைப்பிற்கிணங்க கிளே எகிப்து வந்திருக்கிறுர்.

அழகு, மேன்மை, பரிசுத்தம் ஆகியவற்றை வெள்ளை நிறம் பிரதிபலிக்கிறதென்றும், எல்லாத் தீமைகளுக்கும் கறுப்பு நிறம் பிரதிபலிப்பாக இருக்கிறதென்றும் நம்பிக்கைகொண்டு ஒரு அமெரிக்க குழந்தை வளருகிறது. வெள்ளையர்கள் தேவதைகள், கறுப்பர்கள் பிசாசுகள் என்பது அவர்கள் எண்ணம்' என்றும் கிளே தெரிவித்தார்.

பி. டி. ஸி.

---

## 5 வீரரைக் கொன்று இருவரை தோளில் தூக்கிவந்தான்!

### கூர்க்க வீரருக்கு பிரிட்டிஷ் விருது

லண்டன், ஜூன் 2

அசாத்திய வீரசாகசத்திற்காக அளிக்கப்படும் பிரிட்டனின் ஆக உயர்ந்த 'விக்டோறியா கிராஸ்' ராணுவ விருதைப் பெறுமுகமாகச் சிறிய, ஆங்கிலம் பேசமுடியாத, சங்கோஜ உணர்ச்சி கொண்டு ஒரு கூர்க்கவீரன் சிங்கப்பூரிலிருந்து விமான மார்க்கமாக லண்டன் வந்து இறங்கினுர்.

26 வயதான லான்ஸ்-கார்ப்பொரல் ராம்பகதூர் லிம்பு என்ற இவர், பிரின்ஸஸ் மேரி 10வது கூர்க்கப் படையைச் சேர்ந்தவர்.

கடந்த நவம்பர் மாதம் சரவாக்கில் நடைபெற்ற 20 நிமிடச் சண்டையில், எதிரிகளின் சரமாரியான மெஷீன் பீரங்கித் தாக்குதலுக்கு மத்தியில் இவர் ஐந்து இந்தோனேஷிய வீரர்களைக் கொன்று, காயம் அடைந்த இரு சகாக்களைத் தன் தோளில் சுமந்துவந்து காப்பாற்றிய தீரத்திற்காக 'விக்டோறியா கிராஸ்' விருது வழங்கப்படவிருக்கிறுர்.

ஜூலை மாதம் 12-ந் தேதி பக்கிங்ஹாம் அரண்மனை செல்லும் இவருக்கு, மகாராணி எலிஸபெத் இந்த விருதை வழங்குவார். கடந்த 3 வருடங்களில் முதல் தடவையாக வழங்கப்படும் உயர் விருது இதுவேயாகும். அவருடன் லான்ஸ் கார்ப்பொரல் சந்திரபகதூர் லிம்பு என்ற மற்றுேர் கூர்க்கரும் வந்தார். இதே சண்டையில் இவருக்கு மிலிட்டரி கிராஸ் வழங்கப்பட்டிருக்கிறது. வேறு இரு கூர்க்கர்களும் ராம்பகதூருடன் வந்திருக்கிறுர்கள்.

ஆடம்பரமான வெஸ்ட் எண்ட் தையல்ஸ்தாபனத்திடம் ராம்பகதூர் செல்வது அவரது அலுவல்களில் ஒன்று. இங்கு அவருக்கு யூனிபோம் ஒன்று தயாரிக்கப்படும் மனைவியை இழந்த ராம்பகதூருக்கு 3 புதல்வர்கள். கடைசிப் புதல்வனுக்கு 8 மாதங்களே ஆகின்றன. (பி டி ஸி)

---

## சுவர்ணசிங்

பாரிஸ், ஜூன் 2

இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங், நேற்று பிரெஞ்சுத தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினுர் இப்பேச்சுக்கள் பயனுள்ளவையாக இருந்தது என அவர் கூறினுர். திரு சிங் நாளை லண்டன் சென்று, பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேச்சு நடத்த விருக்கிறுர்.

உதவி வெளிநாட்டு மந்திரிதிரு. தினேஷ்சிங், பெல்கிரேட்டுக்குச்சென்றிருக்கிறுர் இன்றிரவு அவர் ஜனுதிபதி டிட்டோவை சந்திக்கிறுர். மண்டலசார்பற்ற மூத்தரப்பு மகாநாடு குறித்து அவர் பேசினுர்.

——

## கி. பாகிஸ்தானில் பொது வேலைநிறுத்தம்

டாக்கா, ஜூன் 2

வருகிற செவ்வாய்க்கிழமை கிழக்கு பாகிஸ்தானில் பொது வேலை நிறுத்தம் செய்யுமாறு தேசிய அவாமி லீக்கும், இடதுசாரி கட்சிகளும் வேண்டுகோள் விடுத்திருப்பதை அடுத்து, பல பட்டினங்களில் தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அன்றைய தினம் அசம்பாவிதங்களைத் தடுக்கும் பொருட்டு பாடசாலைகளும் மூடப்படும்.

——

## ஸ்காட் அறிக்கை பற்றி கண்டனம்

லண்டன், ஜூன் 2

முன்னுள் நாகா அமைதிக் குழுவில் ஒரு உறுப்பினராய் இருந்த வண. மைக்கேல் ஸ்காட் சமீபத்தில் விடுத்த அறிக்கை உண்மைகளை அசட்டை செய்வதாயும், நிலைமைபற்றி பொய்த் தோற்றம் அளிப்பதாயும் பிரிட்டனிலுள்ள இந்திய ஹைகமிஷன் டாக்டர் ஜீவராஜ் மேத்தா கூறியிருக்கிறுர். நாகாலந்து பிரச்னையை 3வது தரப்பு மத்தியஸ்தம் இல்லாவிட்டால், அங்கு பெரும் படுகொலைகள் ஏற்படும் என ஸ்காட் 'டைம்ஸ்' பத்திரிகையில் எழுதியிருந்தார்.

——

## இந்தோனேஷியா - மலேஸியா

## பரஸ்பர நட்புறவுக்கு வழிவகுக்கும் பேச்சு

### இறுதி யோசனைகள் இரு அரசாங்கங்களுக்கும் தாக்கலாகும்

பாங்காக், ஜூன் 2

மலேஸியாவும் இந்தோனேஷியாவும் தங்களுக்குள் நட்புறவுக்கு உருவான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதில் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

இதற்காக வகுக்கப்பட்டுள்ள அடிப்படை நெறிகள் இரு தேச அங்கீகாரத்திற்கும் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. பரஸ்பரம் கருத்துப்பரிவர்த்தனை, பெரும் பயன் அளித்தது என இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக்கும், மலேஸிய துணைப் பிரதமர் துன் ரஸாக்கும் அறிவித்தனர்.

மணிலா ஒப்பந்த அடிப்படையில் திறந்த மனதுடன் பேச்சுக்கள் நடைபெற்றன என்றும் இருவரும் கூறினர்.

இரு நாடுகளுக்குமிடையே மாமூல் உறவை ஏற்படுத்திக்கொள்ளும் யோசனைகள் அடங்கிய கடிதங்களை இரு தலைவர்களும் பரிவர்த்தனை செய்துகொண்டனர்.

---

## குடிகாரர்கள் கவனம்

வாஷிங்டன், ஜூன் 2

ஒவ்வொரு குடிகாரனும் ஒவ்வொரு நாளும் தனது ஆயுளில் ஒரு சிறு பகுதியை இழக்கிறுன் என்றும், சராசரி, ஒரு குடிகாரனின் ஆயுளில் 21 ஆண்டுகள் குறைவு ஏற்படுகிறதென்றும் பிரபல அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் தமது ஆராய்ச்சி மூலம் வெளியிட்டுள்ள தகவல் கூறுகிறது

---

## ரூ. 10 கோடி போர்க் கப்பல்

புதுடில்லி, ஜூன் 2

லியாண்டர் ரக போர்க்கப்பல் ஒன்றைக் கட்டும் வேலை, வருகிற செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதம் ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது. 10 கோடி ரூபாய் செலவும், 4 ஆண்டு காலமும் இதைக்கட்டி முடிக்க செலவாகும் என்றும் அறிவிக்கப்பட்டது

---

## 90 பேர் மாண்டனர்

லாகோஸ், ஜூன் 2

நைஜீரியாவில் சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்கள் விளைவாக 90 க்கு மேலானேர் சொல்லப்பட்டதாயும், 500 பேர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

---

## காமன்வெல்த் பிரதமர் மகாநாட்டுக்கு இந்திரா செல்வார்

புதுடில்லி, ஜூன் 2

ஜூலை மாதம் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு நடத்தப்படுவதை இந்தியா விரும்புமென அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினுர்.

செப்டம்பர் மாதம் இம் மகாநாடு நடத்தப்படுவதை பிரிட்டன் ஆதரிப்பதாக வெளிவந்த செந்தி பற்றிக் கேட்டபோது, இதர நாடுகளுக்குக் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளுக்கு இதுவசதியான காலமாய் இருந்தால், செப்டம்பரில் மகாநாடு நடத்துவதை இந்தியா ஆட்சேபிக்காது என்றும் அவர் கூறினுர்.

தேர்தலுக்கு முன்னைய வருடமாய் இருப்பதால், ஸ்ரீமதி காந்தி இவ்வாண்டு காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வது சந்தேகமே என விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின. எனினும் தனது மந்திரிகளில் ஒருவரை அவர் தமக்குப்பதிலாக அனுப்பக்கூடும் என்றும் இந்த வட்டாரங்கள் கூறின.

அதேசமயம் ஸ்ரீமதி காந்தியின் வசதிக்கேற்ப டிட்டோ-நாஸர்-இந்திரா சந்திப்பு டில்லியில் நடைபெறவேண்டுமென அரசாங்கம் வற்புறுத்திவருவதாக அறிவிக்கப்பட்டது.

---

## அணுசோதனைக்கு பின்பே ஆயுதபரிகரணம்!

கெய்ரே, ஜூன் 2

சில முன் நிபந்தனைகளுடன் உலக ஆயுதபரிகரண மகாநாட்டில் கலந்து கொள்ளத் தயாராய் இருப்பதாக சீன ஐக்கிய அராபியக் குடியரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

சீன தமது அணுசோதனைத் தொடர்ச்சியை முடித்தபின்பே அது சாத்தியம் என்பது ஒரு நிபந்தனை.

போர்மோஸா இந்த மகாநாடில் பங்குகொள்ளக்கூடாது என்பதும். பிரான்ஸ் மகாநாட்டில் கலந்துகொள்ளவேண்டும்என்பதும் வேறுநிபந்தனை.

அதேசமயம் மாதிரிக்கு அணுகுண்டு செய்வதற்கும் அணுஅரசு ஆவதற்குமிடையே நிறை வித்தியாசம் இருக்கிறது என இந்திய அணுசக்தி கமிஷனின் புதிய தலைவர் டாக்டர் விக்ரம்சாராபாய் நேற்றுக் கூறினுர்.

''சீனுவின் சமீப வெடிப்பு ஒரு ஜலவாயுக் குண்டு அல்ல, இந்தியா நினைத்தால் உலகின் சிறந்த தரத்துடன் ஒப்பிடக்கூடிய அணுகுண்டை [illegible] முடியும். இதுபற்றித் தீர்மானிப்பது அரசாங்கத்தின் முடிவையே பொறுத்தது'' என்றும் அவர் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

யாரையும் புண்படுத்தாதீர். அன்பு, மன்னிப்பு, கருணை இவை மூலம் கோபத்தை அடக்குங்கள். படுக்கப் போகுமுன் அன்று பகலில் நீங்கள் உள்ளத்தால், வாயால், உடலால் செய்த தவறுகளை ஆராய்ந்து, நினைந்து அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டுமெனத் தினக்குறிப்பில் எழுதுங்கள். பழைய குற்றங்களைப் பற்றியே சிந்தித்துக் கவலைப்படாதீர்கள். —சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 339

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 21 உ (3-6-66)


## இந்தியா - பாகிஸதான் உறவுகள்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உறவுகள் மேம்படுவதற்கான சில நல்ல அறிகுறிகள் இப்போது தோன்றியுள்ளன. பாகிஸ்தானின் பேச்சும் போக்கும் தாஷ்கண்ட் ஒப்பந்தத்துக்குப் பின்னும் மாறாமல் இருந்தும், இந்தியா ஒருதலைப்பட்சமாக, பாகிஸ்தானுக்கு மாறான வர்த்தகத் தடைகளைத் தளர்த்துவதாகப் பெருந்தன்மையுடன் அறிவித்தது. தாஷ்கண்ட் ஒப்பந்தப்படி இந்தியா எடுத்த இந்த நடவடிக்கை, பாகிஸ்தான் மனதை மாற்றவும், இரு தேச மந்திரிகளும் நேரில் கலந்து பேசவேண்டுமென்று அது உணர்ந்து, அதற்கான முயற்சிகளைச் செய்யவும் தூண்டியுள்ளது. நல்ல காரியத்தை ஒருதலைப்பட்சமாகச் செய்வதிலுள்ள நன்மை இதிலிருந்து உணரக்கூடியதாக உள்ளது.

ரஷ்யாவின் பெருமுயற்சியினாலும், உதவியினாலும் தான் தாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்படமுடிந்தது. அந்த ஒப்பந்தம் ரஷ்யாவின் செல்வாக்கை உலக அரங்கிலே பெரிதும் உயர்த்தியது. ஆனால் பின்னர் அந்த ஒப்பந்தத்துக்கு மாறாகக் காரியங்கள் நடந்ததால் ரஷ்யா, தன் கௌரவத்தையும், செல்வாக்கையும் காத்துக்கொள்ளவாவது, இதில் விசேஷ சிரத்தை காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ரஷ்ய தூதுகோஷ்டியினர் பாகிஸ்தானுக்கு வந்து பேச்சுக்கள் நடத்தியுள்ளதன் நோக்கம் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தைப் பூரணமாக அமுலுக்குக் கொண்டுவரும்படி செய்வதாகவே இருக்கவேண்டும்.

எந்தத் தகராறுகளையும் தீர்த்துக்கொள்ள இந்தியா, பாகிஸ்தான் இவ்விரு நாடுகளும் பலாத்காரத்தைக் கைக்கொள்ளக்கூடாது என்றும், ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்றும் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் மூலம் ஒப்புக்கொண்டன. அத்துடனின்றி, பரஸ்பர விரோதப் பிரசாரம் செய்யக்கூடாதென்றும், நட்புறவைப் பலப்படுத்தக்கூடிய முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்றும் ஒப்பந்தம் தெளிவாகக் கூறுகின்றது. ஆனால் சென்ற சில மாதங்களில் இந்த ஒப்பந்தத்துக்கு மாறான முறையில் காரியங்கள் நடைபெற்றுவந்துள்ளன. ஆகவே ரஷ்யா இதில் தலையிடவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டது.

காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க இந்தியா என்ன செய்யப்போகிறதென்பது முக்கிய கேள்வி. அந்தப் பிரச்னையே கிடையாதென்று கூறுவது, பிரச்னையைத் தீர்க்கவோ, இந்திய-பாகிஸ்தான் உறவுகளை மேம்படுத்தவோ உதவாது. காஷ்மீர் மக்கள் இப்போது இரு கூறுகளாகப் பிளவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். இவ்விருபகுதிகளையும் மீண்டும் ஒற்றுமைப்படுத்தும் வரை காஷ்மீர் பிரச்னை தீரமுடியாது. ஒன்றுபடவேண்டுமென்று சம்பந்தப்பட்ட மக்கள் பெரிதும் விரும்புவரென்பதில் ஐயமில்லை. அதற்கான முறையில் காரியங்கள் செய்வதுதான் காஷ்மீர் மக்களின் பிரச்னை நிரந்தரமாகத் தீருவதற்கு வழிசெய்யும். இப்போதுள்ள யுத்த நிறுத்தக் கோட்டை வைத்து காஷ்மீரை இரு துண்டாக்கலாமென்று கூறப்படும் யோசனை பிரச்னை தீருவதற்கு வழிசெய்யாது சங்கடங்கள் கிளம்பிக்கொண்டு புதுப்புதுப் பிரச்னைகளை ஏற்படுத்துமென்பதை விளக்கத் தேவையில்லை. துரதிருஷ்டவசமாகப் பிளவுபடுத்தப்பட்ட அந்த மக்களை மீண்டும் சேர்க்கக்கூடிய ஏற்பாட்டை இந்தியா-பாகிஸ்தான் இவ்விரு நாடுகளும் தீர்க்கதரிசனத்துடனும் விரிந்த மனப்பான்மையுடனும் செய்யவேண்டும். இதில் சுயநலனுக்கோ, வீண் கௌரவங்களுக்கோ இடமளித்தல்கூடாது. ரஷ்யாவின் மேலான மத்தியஸ்தத்துடன் இப்பிரச்னை சுமுகமாகத் தீர்ந்தால், இந்திய-பாகிஸ்தான் உறவுகள் மேம்பட்டு இரு நாடுகளும் முன்னேற வழி பிறக்கும்.

## வர்த்தகர் மட்டும் பொறுப்பல்ல!

ஜவுளி விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இது பொதுமக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆனால் விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் அலுக்கு வந்ததும், முன்னர் தாராளமாகக்கிடைத்த ஜவுளிகள் மறைந்துவிட்டதாகவும் கட்டுப்பாட்டு விலையில் தங்களுக்குத் துணிகள் கிடைக்காமலிருப்பதற்கு வர்த்தகர்கள் பலவிதமான தந்திரோபாயங்களைக் கையாள்வதாகவும் பொதுமக்கள் பலர் குறை கூறுகின்றனர்.

துணிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கும் ஜவுளிவிலைகள் அதிகரித்ததற்கும் இப்பொழுது வர்த்தகர்கள் தந்திரங்களைக் கையாள்வதற்கும் வர்த்தகர்களை மட்டும் குறைகூறிப்பயனில்லை. இச்செயல்களுக்குப் பொதுமக்களும் ஓரளவு பொறுப்பேற்கத்தான் வேண்டும்.

அரசாங்கம் இறக்குமதிக்கு அனுமதியளித்த துணிகளையும் உள்நாட்டில் உற்பத்தியான துணிகளையும் மக்கள் பாவித்திருக்கவேண்டும். விலை உயர்ந்த ஆடம்பர[illegible] துணிகளையே பலரும் விரும்பியதால், இறக்குமதிக்கட்டுப்பாட்டையும் மீறி வர்த்தகர்கள் விலை உயர்ந்த துணிகளை, கள்ளத்தனமாகவாவது இறக்குமதி செய்ய வேண்டியேற்பட்டது. இதேசமயம் இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்ட துணிமணிகள் விற்பனை செய்யப்பட்டு வந்ததை அரசாங்கமும் கவனித்து நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். விலை உயர்ந்தபட்டு, டெர்லின் போன்ற துணிகளை பொதுமக்கள் வாங்காதுவிட்டால் வர்த்தகர்கள் ஏன் விற்கப்போகிறார்கள்!

விலைகுறைந்த, சாதாரண துணிகளை உபயோகிப்பதற்கு செல்வந்தர்களும் மற்றும் உயர்பதவியிலிருப்பவர்களுமே வழிகாட்டவேண்டும். திருமணத்துக்கு பட்டும் சரிகையும் இழைத்த சேலைகள் அவசியமென்பதில்லை; அதுசாத்திரமுமல்ல. நம்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் [illegible] சேலைகளே போதும். இதற்கும் செல்வந்தர்களே வழிகாட்ட வேண்டும்.

பண்புடனும் சிறப்புடனும் வாழ

## சட்டம் முக்கியம்

— இராஜ - இராஜேஸ்வரன் தங்கராஜா —

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உரோமாபுரி சிறந்திருந்த காலத்தினை அல்லது சென்ற நூற்றாண்டு இங்கிலாந்து மேலோங்கி நின்ற காலத்தினை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் அவர்களின் சட்டமுறை சிறந்திருந்தது; மதிப்புப்பெற்றிருந்தது. அனைவரின் நம்பிக்கைக்கும் பாத்திரமாய் இருந்து வந்ததையும் நாம் அறிவோம்.

இலங்கையிலும் இந்தியாவிலுங்கூட வேத ஆகம காலந்தொட்டு அசோகன் காலத்தைக் கடந்து, அக்பர் காலத்தைக் கடந்துஎங்கள் கடைசிமன்னன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் காலம் வரைதர்ம முறைப்படிநமது மக்கள் வாழ்ந்துவந்தகாலங்களில், அவர்கள் நாகரிகத்துடனும்சிறப்புடனும்வாழ்ந்து வந்ததை நாம் அறிவோம்.



காலப்போக்கில் நீதியும் நேர்மையும் நாட்டினிலே குன்றவே, ஒற்றுமையும் நம்பிக்கையும் குறையவே, அந்நியர்ஆதிக்கத்தை வரவழைத்து அடிமைகளாய் அல்லற்பட்டு ஆண்டிகளாய் அவஸ்தைப்பட்டு வாழ்ந்து வந்த காலத்தையும் நாம் அறிவோம்.

இதேபோல் (உலக அரங்கில்) பல்லாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவில் அட்டகாசம் செய்த அலறிக், அல்லாவிட்டால் ஆசியாவில் குழப்பஞ் செய்த ஜெங்கிஸ் கான் போன்ற கொள்ளைத் தலைவர் காலத்திலே சட்டமுறை அழிந்திருந்தது, நீதிநெறி குன்றியிருந்தது, எல்லார் மனதிலும் சஞ்சலமும் பயமும் பெருகி அநாகரிக வாழ்வு நிலைபெற்றிருந்தது.

இந்த 20-ம் நூற்றாண்டிற்கூட நம் கண்முன் இனத்துவேஷக் கொள்கைகளைப் பரப்பியும் பிறநாட்டினரை அடிமையாக்கும் ஆசையை வளர்த்தும் நியாயத்தையும் மறந்து நீதியைப் புறக்கணித்து வந்த ஜெர்மனியத் தளபதி ஹிட்லரும், இத்தாலிய அதிபதி முசோலினியும் எங்ஙனம் தமது நாடாகிய ஜெர்மனியையும் இத்தாலியையும் இறுதியில நாசமாக்கினது மட்டுமல்லாமல், உலகம் முழுவதையும் அதிகோரமான யுத்தங்களில்ஈடுபடுத்தி கோடிக்கணக்கான மக்களை வருத்தி வதைசெய்த வரலாற்றையும் நாம் அறிவோம். நமது கலாசாரத்திற்கு ஒவ்விய பழம்பெருமை வாய்ந்த நூல்களைப் படிக்கும் போதுகூட, தசரதன் தர்ம முறைப்படி செங்கோலோச்சிய காலத்திலே மக்கள் சுபீட்சத்துடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த வரலாறும், ஆற்றலும் தவப்பலனும் கொண்ட இராவணன் மன்னன்கூட நீதி முறையினைச் சரிவரக் கடைப்பிடித்து ஒழுகத் தவறிய காரணத்தால் அழிக்கப்பட்டு இலங்காபுரியும் எரிக்கப்பட்ட வரலாறும் எங்கள் நினைவிற்கு வருகின்றன.

இந்த உதாரணங்கள், ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, ஒரு மக்களின சமாதான வாழ்விற்கு, சுபீட்சத்திற்கு, நாகரிகத்திற்கு நலனுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது சட்டம்என்பதையும் — இந்தச் சட்டம் அனைவராலும் ஏற்கப்பட்டு நியாயரீதிப்படி அமைந்து இருக்கவேண்டும் என்பதேயாகும். இந்தப்பேருண்மை ஒருநாட்டு மக்கள் மனதிலும் பதிந்திருந்தால் அந்நாட்டில் நிலவி வருவது எந்தவித அரசியல் திட்டமாயிருந்தாலும் அது மனித சமுதாய முன்னேற்றத்திற்குதவரும வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

இந்த உண்மைகளை மனிதன் முன்னேற்றத்திற்கும் நாகரிக வாழ்விற்கும் நீதியும் நியாயமும் நிலவவேண்டியது இன்றியமையாதது என்பதைப் பொதுமக்களுக்கு விளக்கி இவற்றிற்கு ஆணிவேராய் அமைந்துள்ள சட்டத்தின் மேன்மையைத் தெளிவாக எடுத்துக்காட்டி, அச்சட்டத்தினைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு மனிதனுடைய ஒத்துழைப்பைப்பெற்று, நமது மக்கள் மட்டுமல்லாமல் உலக சமுதாயமே நாகரிகத்துடனும் பண்பிலும் முன்னேற்றத்துடனும் மேலோங்கிச் செல்வதற்கு வழிகாட்டி நிற்பதையே ஒரே ஒரு நோக்கமாகக்கொண்டு ''சட்டதினம்'' ஜூன்மாதம் 1-ந் திகதி இலங்கையிலும், உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்றைய உலகில் சர்வதேச அரங்கிலோ (அல்லாவிடின் ஒரு தனிநாட்டின் உள்நாட்டுக் கொள்கையிலோ) நியாயமுறை வழுவி சட்டத்தைமீறி யதேச்சாதிகாரமாக நடக்கும் தன்மை சில மக்களிடத்திலும் அரசாங்கங்களிடத்திலும் நிலவிவருவதை அறிவோம்?

இந்நடத்தையால் உலக மக்களுக்கு விளையக்கூடிய பெருந்தீங்குகளை சட்ட வல்லுநர்கள் அறிவார்கள் இச்சட்டவல்லுனர்கள் உலக அரங்கில் இந்நிலையை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் பரந்திருந்த இடங்களாகிய கஸ்ராரிக்கா, டோக்கியோ, ஏதன்ஸ், லீயேஸ், வாசிங், ரோம் முதலிய இடங்களில் காலத்திற்குக்காலம், உலகத்தின் சட்ட நிபுணர், அரசியல் தலைவர், விஞ்ஞானிகள் வெவ்வேறு துறைகளிலும் தொழில்நுட்ப வல்லுனர் முதலியோர் பங்குபற்றிய பல்வேறுதேச சட்ட சம்பந்தமான மகாநாடுகளைக் கூட்டி, தேசங்களிடையே நட்பையும் ஒத்துழைப்பையும் பெருக்கி சட்டத்துறையில் ஒற்றுமையையும் நீதியையும் வளர்த்து மனித

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

''பவான்ஸ் ஜர்னல்'' என்ற ஓர் அருமையான பம்பாய் சஞ்சிகையில், ''வேதனைப்பட்ட இந்து உள்ளம்'' என்ற புனைப் பெயருடன் வெளியான கடிதத்தையும் அதைத் தழுவிய முக்கிய கட்டுரையையும் ஓர் அன்பர் காட்டிப் படிக்கச் சொன்னார்.

ஐம்பது வயதுக்கு மேலான ஒருவர் அழகாகக் குடும்பவாழ்க்கை நடத்தி வருகிறாராம். அன்பான மனைவி, அழகான குழந்தைகள், செல்வம், செல்வாக்கு எல்லாம் நிறைந்துள்ளன. தெய்வபக்திக்கும் குறைவில்லை. ஆனால் இளம் பெண்மணிகள் ''நவநாகரிக'' உடை அணிந்து செல்லுவதைக் கண்டதும் தம் மனதில் காமவிகாரம் ஏற்பட்டு தம் தூயஉள்ளத்தைக் கெடுப்பதாயும் சிலசமயம் இரவில் பெரிதும் வேதனை செய்வதாயும், நவநாகரிகப் பெண்கள் ஏன் இப்படி உடை உடுக்க வேண்டுமென்று தமக்குத் தெரியவில்லையென்றும், பெண்கள் அடக்கமாக உடை உடுத்த வேண்டுமென்று ஓர் இயக்கத்தைப் பெரியோர்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

பெண்களில் சிலர் ஏன் இப்படி உடை உடுத்துகிறார்கள்? இக்கேள்வியை மகாத்மாகாந்தி கேட்டு அதற்கான பதிலும் தந்துள்ளார். ஆணுக்கு இன்பமூட்டி திருப்தி செய்ய வேண்டுமென்றே இப்படிப் பெண்கள் உடை தரிப்பதாகச் சில பெண்மணிகள் மகாத்மாவிடம் தெரிவித்தனராம். ''பெண்களாகிய நீங்கள் உலக விவகாரங்களிலே உங்கள் பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமாயின், நீங்கள் மனிதனைத் திருப்தி செய்வதற்காக உடை உடுத்தி அலங்கரித்துக் கொள்ள மறுத்துவிட வேண்டும். நான் மட்டும் ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தால், ஆண்களின் விளையாட்டுப் பொம்மையாகப் பெண்கள் இருக்க முடியாதென்று ஒரு பெரிய கலகத்தையே கிளப்பியிருப்பேன். ஆணுக்கு அடிமைப்பட மறுத்துவிடுங்கள்......'' என்று எழுதுகின்றார் மகாத்மா. மகாத்மா இப்படி எழுதிப் பல வருஷங்களாகின்றன. ஆனால் பெண் உடை அலங்காரங்கள் மேம்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கு மாறாக மிக மோசமாகி வருவதாகவே புகார்கள் கிடைக்கின்றன.

ஃ ஃ ஃ

சென்னையிலிருந்து சீதாலட்சுமி சிவராமன் என்ற பெண்மணி 'இந்தியன்எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஒரு கடிதம் எழுதியுள்ளதைப் பார்த்தேன். ''சமூகத்தில் பெண்கள் மிக மேலான இடம்பெற்று வருவதாயும் ஒரு பெண்மணியே பிரதமர் பதவி வகிப்பது இதற்குஅத்தாட்சி என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் பல விளம்பரங்களிலும், சினிமாப் படங்களிலும் பெண்களின் படங்களை, காமவிகாரத்தைக் கிளப்பும் முறையில் பிரசுரித்து, பெண்மணியை அவமதிக்கின்றனர். பெண்கள்தான் மெல்லிய துணிகளால் மோசமாக உடை தரிப்பதாகச் சிலர் பெண்கள்மீது குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் ஏன் இவ்வித துணிமணிகளை உற்பத்தி செய்து விற்கிறார்கள் என்று கேட்கிறேன். அவர்களும் குற்றவாளிகளல்லவா?

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "இந்துப்பல்கலைக்கழகத்துக்கு காணி, கட்டடம் பணம்யாவும் உள்ளன அரசாங்கத்தின் அங்கீகாரம் மட்டுமே வேண்டும்"

## பல்கலைக்கழகத் தேவைபற்றி ஜி. ஜி. விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சிறிமா அரசாங்கம் மட்டுமன்றி தேசிய அரசாங்கமும், இந்துப் பல்கலைக் கழக கோரிக்கையை ஏற்று, அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடந்த அரசாங்கம் இந்துப் பல்கலைக் கழகத்திற்காக அடையாள மான்யம் ஒதுக்கியது. தேசிய அரசாங்கம் 65-ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்தில் அதனை ஏற்றுள்ளது. இந்துப் பல்கலைக் கழகத்திற்கான, காணி, கட்டடம், போதிய பணம் இருக்கிறது இராமநாதன் தர்மநிதி, நாவலர் தர்மநிதி, மழவராயர் தர்மநிதிகளில் இந்துப் பல்கலைக் கழகத்திற்காக லட்சக் கணக்கில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அ சாங்கத்தின் அங்கீகாரம் மட்டும் தான் இதற்குத் தேவை"

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்து பல்கலைக் கழக ஆலோசனைக்கூட்டத்தில். யாழ்ப்பாண எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்,

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

### சமய அடிப்படையில் பல்கலைக் கழகம்

இந்துப் பல்கலைக் கழக கோரிக்கை இன்று நேற்று எழுந்ததல்ல. இராமநாதன் காலத்திலேயே இது எழுந்தது. இந்துப் பல்கலைக் கழகக்கோரிக்கை ஒரு தனிப்பட்ட கட்சியின் கோரிக்கையல்ல. தமிழ் மக்களிடையேயுள்ள பல சங்கங்களின் ஏகோபித்த கோரிக்கையாகும். சகல சமயத்தவரின் ஆதரவையும்பெற்ற கோரிக்கையாகும்.

உலகத்தில் எந்தநாட்டிலும் மொழி அடிப்படையில் பல்கலைக் கழகம் இல்லை. சமய அடிப்படையில்தான் உண்டு. காசியில் இந்துப் பல்கலைக் கழகமும், அலிகாரில், முஸ்லிம் பல்கலைக் கழகமும். சமய அடிப்படையில் தான் இருக்கின்றன. இங்கு எல்லாசமயத்தவர்களும்பயில்கிறார்கள்.

இந்துப் பல்கலைக் கழகத்தில் மற்ற சமயத்தவர்களுக்கு இடமிருக்காதுஎன சிலர் கருதுகிறார்கள். இதுதவறான கருத்து. காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் சகல சமயத்தவர்களும் பயில்வது போல இந்துப் பல்கலைக் கழகத்திலும் எல்லா சமயத்தவர்களும் பயிலலாம்.

இந்து சமய அடிப்படையில் நிறுவப்பட்ட அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் முதலாவது உபவேந்தர் ஒரு கத்தோலிக்கர். நான் மற்ற சமயத்தவரை புறக்கணிக்கவில்லை. எனது சகோதரர் ஒரு கிறிஸ்தவ பாதிரியார், என்னைத் தெரிவுசெய்த மக்களில் அதிகமானோர் பிறசமயத்தவர்.

### கத்தோலிக்கர் ஆதரவு

பல்கலைக் கழக விஷயமாக இந்துக்களுடன் ஆலோசிப்பதற்கு முன் முதலில் கத்தோலிக்க சுவாமிகளுடன் கலந்தாலோசித்து அவருடைய முழு ஆதரவையும் பெற்றுள்ளேன். ஆதலால் இந்துப் பல்கலைக் கழகத்தில் எல்லா சமயத்தவர்களும் பயிலலாம்.

பௌத்த சர்வகலாசாலை 61-ம் ஆண்டு நிறுவப்பட்ட சமயம், இராமநாதன், பரமேஸ்வரா கல்லூரிகளை சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கவேண்டுமென்றும், யாழ்ப்பாண கல்லூரியை அமெரிக்கன் பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டுமென்றும், பேராசிரியர்கள் வரவழைக்கப்பட வேண்டுமென்றும், நான் திரு. பாங்கருக்கு எழுதினேன்.

கல்வி மந்திரி யாழ்ப்பாணம் வந்தபொழுது, யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகப் பிரிவுநிறுவ சம்மதித்தார். ஆனால் சிலரின் தலையீட்டினால் இது தாமதிக்கப் பட்டது.

இந்து பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும் என விரும்பிய இராமநாதன் மற்றச்சமயத்தவர்கள் படிக்கக்கூடாதென தடைவிதிக்கவில்லை.

### தமிழ்ப் பல்கலைக் கழகத்தை எதிர்க்கவில்லை

தமிழ் சர்வகலாசாலையை நான் எதிர்ப்பதாக சிலர் கூறுகிறார்கள் அதற்கு நான் மாறில்லை தமிழ் சர்வகலாசாலை கோரிக்கையை இதுவரை எந்த அரசாங்கமும் ஏற்கவில்லை. அதுநடைமுறையில் நிறைவேறாதது ஒன்று. சமஷ்டிக்கட்சியினர்வேண்டுமானால் அரசாங்கத்திடம் கேட்டு தமிழ் சர்வகலாசாலையை கிழக்கு மாகாணத்தில் பெற்றுக்கொள்ளட்டும் அதற்காக தமிழினத்திற்கு கிடைக்கவிருக்கும், இந்து பல்கலைக் கழகத்தை தடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### திருமலைக்கு பாடசாலைதான் தேவை

திருக்கோணமலைக்கு தற்பொழுதுதேவையானது பல்கலைக் கழகமல்ல, நல்ல சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைதான் தேவை. அங்கு தொழில் நுட்ப கல்லூரி இல்லை. விவசாயப்பாடசாலையில்லை. நல்ல கல்லூரியில்லை. இந்த சூழ்நிலையில் சர்வகலாசாலை நிறுவமுடியுமா? மேலும் உலகில், ஜப்பான் சர்வகலாசாலை, பிரான்ஸ் சர்வகலாசாலை சிங்கள சர்வகலாசாலையென மொழியைக்கொண்ட சர்வகலாசாலை ஒன்றுகூட இல்லை ஆனால் சமயத்தை அடிப்படையாகக்கொண்ட பல சர்வகலாசாலைகள் உள்ளன

இலங்கையிலுள்ள வித்தியோதய, வித்தியலங்கார சர்வகலாசாலைகள் பேராதனை பல்கலைக் கழகம் போல சகல வசதிகளையும் கொண்டதல்ல, பேராதனை பல்கலைக் கழகம் [illegible] கோடி ரூபா செலவாகும். அதனைக் கட்டி முடிக்க பத்துவருடங்கள் செல்லும், அரசாங்கம் இவ்வளவு பெருந்தொகையான பணத்தை செலவிடுமா? நாம் பெறக்கூடியதைத்தான் கேட்கவேண்டும் இந்துப் பல்கலைக் கழகத்திற்கு, கட்டடம், காணி, போதிய நிதிஉண்டு. நம்மத்தியில் பேராசிரியர்களும் உண்டு. நமக்கு தேவையானது அரசாங்கத்தின் அங்கீகாரம்தான்.

பேராதனையில் இடமில்லையெனத் தமிழ் மாணவர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுஅங்கு பலகஷ்டங்களை அனுபவித்துவருகிறார்கள். கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் இந்தியா சென்று பட்டம்பெற்றுவந்தார்கள். இந்த வசதி இனிமேல் கிடையாது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் விரைவில் சர்வகலாசாலை அமைத்தால் தான் தமிழ்மக்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள்.

### பேராதனையில் தமிழ் ஒழிப்பு

பேராதனையில் தமிழை முற்றாக ஒழிக்க முயற்சி நடைபெற்றுவருகிறது. தமிழ்ப் பிள்ளைகள் கல்வித்துறையில் முன்னேற வேறு வழியென்ன? விஞ்ஞானப் பாடங்களைப் போதிப்பதற்கு பேராதனையில் விரைவில் மீண்டும் ஆங்கிலத்திற்கு இடமளிக்கப்போகின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் தமிழ் மாணவர்கள் விஞ்ஞானக் கல்வியை ஆங்கிலத்தில் கற்காவிடில் கல்வித்துறையில் முன்னேறமுடியுமா? தமிழ் மாணவர்கள் கல்வித்துறையில் முன்னறேவேண்டுமானால் தேசிய சர்வகலாசாலையில் தமிழருக்குத் தொடர்ந்துஇடம் கிடைக்க வேண்டும். இந்நாட்டின் முழு வருமானத்தைக் கொண்டுதான் பேராதனை சர்வகலாசாலை கட்டப்பட்டது. ஆதலால் அங்கு தமிழ் மாணவர்களுக்கு என்றும் உரிமை இருக்கவேண்டும்.

சர்வகலாசாலையில் இட நெருக்கடியை நீங்குவதற்காக நாட்டிலுள்ள பெரிய கல்லூரிகளில் பல்கலைக் கழக முதல்வருட வகுப்பை நடாத்த வேண்டும் இப்படி நடந்தால் இங்குள்ள தமிழ் மாணவர்களுக்குப் பேராதனையில் சரிசமமான அந்தஸ்துக்கிடைக்கும்.

பேராதனையில்தமிழ் ஒதுக்கப்பட்டபின் தமிழ் மாணவர்கள் உயர் படிப்பை எங்கே கற்பது? பேராதனையில் தமிழருக்கு இடம் வேண்டாமென்றால், தமிழர் பிரிந்துவிடுவது நல்லது.

முஸ்லிம்கள் தங்கள் கலாச்சாரத்தை வளர்க்க முஸ்லிம் பல்கலைக்கழகம் வேண்டும் என ஏகோபித்துக் குரல் எழுப்பியுள்ளார்கள். அதற்கான வழிவகைகளைச்செய்து வருகிறார்கள். அவர்களின் கோரிக்கையும் வெற்றி பெறும்.

### இந்துப்பல்கலைக்கழகம் [illegible]டைக்கும்

இன்றில்லாவிட்டாலும், எதிர்காலத்தில் தமிழ் இனத்துக்கு இந்நாட்டில் ஒரு சர்வகலாசாலை இருக்குமானால் அது இராமநாதன் இந்துப்பல்கலைக்கழகம்தான் தமிழ் மக்களுக்கு திருக்கோணமலையிலோ, வேறு எந்த இடத்திலோ மற்றொரு சர்வகலாசாலை ஏற்படப் போவதில்லை. இராமநாதனின் கட்டடங்களையும், காணிகளையும் திருக்கோணமலைக்குக்கொண்டு போக முடியுமா? அவரின் தர்மசாஸனத்தில் இந்துக்கலாச்சார அடிப்படையில் சர்வகலாசாலை அமையவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இராமநாதன் இந்துப்பல்கலைக்கழகம்தான் எதிர்காலத்தில் தமிழினத்தின் ஒரே ஒரு பல்கலைக்கழகமாகவிளங்கப்போகிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"பெண்கள் இந்த அவமதிப்பையும் அநீதியையும் எதிர்த்து சத்தியாக்கிரகமும் செய்ய வேண்டும். அவர்கள் முதலில் கவர்ச்சியான உடை அலங்காரங்களை விட்டு, கட்டுப்பாடான கிளர்ச்சியைச் செய்யவேண்டும்......" என்கிறார்.

ஃ ஃ ஃ

"காஞ்சிபுரம், பட்டு முதலியவைகளைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பதைவிட, அதையெல்லாம் கொளுத்திவிடுவோம்" என்றுகொழும்பிலேசிலதுணிக்கடைக்காரர்கள் ஆத்திரத்துடன் கூறினார்களாம் ஆனால் அப்படிச் செல்வார்களா என்பது சந்தேகம்.

என்றாலும் அரசாங்கத்தின் புதிய நடவடிக்கை மூலம், நமது பெண்மணிகளின் உடை அலங்காரத்தில் புதிய மாறுதல் ஏற்படமுடியுமாயின், அரை நிர்வாண "பாஷன்" குறையுமாயின், வாழ்க்கைச் செலவும் குறைவதுடன், பெண் சமூகத்தின் கௌரவமும் உயரக்கூடும். நடப்பதெல்லாம் நல்லதுக்குத்தானே!

ஃ ஃ ஃ

நந்தி நாமம் நமச்சிவாய
வெனும்
சந்தையால் தமிழ் ஞான
சம்பந்தன் சொல்,
சிந்தையால் மகிழ்ந்தேத்
தவல்லாரெலாம்
பந்தபாசம் அறுக்க வல்
லார்களே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

## சட்டம் முக்கியம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்திற்கே சேவை செய்துவருகின்றனர். ஆனால் இதில் நாம் காணவேண்டியது யாதெனில் கூட்டங்களும் மகாநாடுகளும் நடந்து முடிந்தபின்பு அவற்றுடன் எழுந்த கலகலப்பும் பரபரப்பும் நீங்கியபின்பு முக்கியமாகப் பொதுமக்கள் மனதில் சட்டத்தின் மேன்மையும் அதைப்பேணிப் பாதுகாத்து அதன்படி அவர்கள் ஒழுகவேண்டியது அவசியம் என்ற உணர்ச்சியும் எவ்வளவு தூரம் பதிந்துள்ளது, என்பதேயாகும்.

தர்மத்துக்கும் நீதிக்கும் பொருத்தமான சட்டமுறை இல்லாவிட்டால் எந்தச்சமுதாயமும் நாகரிகத்துடன் நிலைத்திருக்க முடியாது. வெகுவிரைவில் மனிதர் விலங்குகளாய் மாறிவிடுவர். இவ்வுண்மையை ஒவ்வொருவரும் ஆணோ பெண்ணோ குழந்தையோ அல்லாவிடில் குடும்பமோ வெறெந்த ஸ்தாபனமோ உணர்ந்து அதற்குத்தக அனைவரையும் ஒழுகப்பண்ணுதலே எமது நோக்கமாகும்.

இலட்சியங்களையும் கொள்கைகளையும் நமது அன்றாட வாழ்க்கையில் நமது நண்பர்களுடன், குடும்பத்தினருடன் உறவாடும்பொழுதும், அன்னியருடன், அயலவருடன் பழகும்பொழுதும், கடைப்பிடித்து- சட்டத்தின்படி தர்மநீதியின்படி வாழ்ந்துவரப்பழகவேண்டும். பின்னர் இந்தஇலட்சிய நீதி முறையைப் பிறரும் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய உதவி[illegible] வேண்டும்.

# 'சைவச்சூழ்நிலையில் கல்விபெற வேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கை இராமநாதன் காலத்திற்கு முன்பே எழுந்தது. சைவப்பிள்ளைகள், சைவ சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டுமென ஆறுமுக நாவலர் விரும்பினார். அதனைத் தொடர்ந்து பல கட்டங்களில் இக்கோரிக்கை வலுப்பெற்று வந்தது"

இந்துப்பல்கலைக்கழக ஆலோசனை கூட்டத்திற்கு தலைமைதாங்கிய சைவபரிபாலனசபைத்தலைவர் திரு. எஸ். முத்துசாமிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

"இலைத் தேசமக்கள் எல்லோருக்கும், தான் நிறுவும் கல்லூரி, சர்வகலாசாலையாக விளங்க வேண்டும் என்று சேர். இராமநாதன் விரும்பினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியையா,. இராமநாதன் கல்லூரியையா சர்வகலாசாலையாக்குவது என்ற ஒரு பிரச்னை எழுந்தது. இந்துக் கல்லூரி அதிகார சபையின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இராமநாதன் கல்லூரியையே சர்வகலாசாலையாக்க ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இதனை காலஞ்சென்ற நடேசபிள்ளை வரவேற்றார்.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா, இந்துப் பல்கலைக்கழக கோரிக்கையை ஏற்றார், அதன் பின் சிறிமா அ சாங்கம், சிம்மாசனப் பிரசங்கத்தில், இக்கோரிக்கையை வெளியிட்டு அடையாளமான்யமும் ஒதுக்கியது இந்துப்பல்கலைக் கழகத்திற்கென ஒரு சட்டம் தயாரிக்கப்பட்டது" என்றுதிருமுத்துச்சாமிப்பிள்ளை கூறினார்.

"சைவமக்கள் இரண்டாவது பெரும்பான்மை இனமாக இந்நாட்டில் வாழ்கின்றனர். அப்படியிருந்தும் அவர்களுக்கு இதுவரை இந்து சர்வகலாசாலை நிறுவப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் தமிழ் சர்வகலாசாலை வேண்டும் என்று சிலர் கூறுகிர்கள். கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்டால், மாணவர்களும், பேராசிரியர்களும் இங்கிருந்துதானே போகவேண்டும்" என்று திரு. முத்துச்சாமிப்பிள்ளை மேலும் கூறினார்.

திவ்ய ஜீவன சங்கத் தலைவர் திரு. எஸ். தனபாலசிங்கம் கூறியதாவது;

"இந்துப்பல்கலைக் கழகத்திற்கு எண்பது ஏக்கர் காணி மருதனமடத்திலும், திருநெல்வேலியிலும், கோப்பாயிலும் உண்டு. 600 ஏக்கர் வயலிலிருந்து வருடா வருடம் வருமானம் வந்து கொண்டிருக்கிறது. லட்சக் கணக்கில் சொத்து இருக்கிறது. இந்தநிலையில் இந்துப் பல்கலைக்கழகம் ஏன் நிறுவக்கூடாது"

"தமிழ்சர்வகலாசாலையை பதவிக்கு வரும் எந்த அரசாங்கமும் கொடுக்காது. நான் தமிழரசுக் கட்சி அங்கத்தவராக இருந்த பொழுது, தெளிவாக அவர்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் கொண்டைக்காரரா?

## திருவள்ளுவர் கொண்டை வைத்திருந்தாரா? அவர் தாடியும் மீசையும் வைத்திருந்தாரா?



'வள்ளுவன் தன்னை உலகி பகுதியிலும் கொண்டாடப் னுக்கே தந்து வான்புகழ் படும் இச் சந்தர்ப்பத்தில், கொண்ட தமிழ்நாடு' என் வள்ளுவர் பற்றிப் புதிய ரூர் அமரகவி. உலகப் தோர் பிரச்னையை, 'கதம்ப பொதுச் செல்வமாகிய திரு மாலை' அளிக்கிறது வள்ளுவரின் தினம் தமிழ் இதுவரை திருவள்ளுவர் கூறும் நல்லுலகின் பெரும் பற்றி எவ்வளவோ சர்ச்சை

கள் நடைபெற்றன, அவரது மதம், அவர் வாழ்ந்த காலம் மற்றும்பல பிரச்னைகளை வைத்துச் சர்ச்சைகள் நடந்திருக்கின்றனமிக அண்மைக் காலமாக வள்ளுவரின் உருவ அமைப்புப் பற்றியும் ஆங்காங்கு பிரச்னை எழுவதுண்டு இந்தியஅரசாங்கமும் அந்தப் பெருமகனரது உருவத்தை, அன்னுரைக்கௌரவிக்குமுகமாக, முத்திரையில் பதித்து வெளியிட்டுள்ளது.

எது எப்படியாயினும், வள்ளுவர் தாடியும் மீசையும் உச்சியில் கொண்டையும் வைத்திருந்தாரா என்பதே. இங்கு எழுத்தாளர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் வாசகஅன்பர்களுக்கும் 'ஈழநாடு' 'கதம்பமாலை' விடுக்கும் பிரச்னையாகும். தகுதியான கட்டுரைகள் 'கதம்பமாலை' யில் இடம் பெறும். கட்டுரைகள் சுருக்கமாக அமைதல் விரும்பத்தக்கது.

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்ததொழித்து விடின்''

—திருக்குறள்

# முத்துச்சரம்

### எழுதாக்கருத்து

இராமாயணம் வேறுமாதிரி அமைந்திருந்தால், அது சமூகத்துக்கு இன்னும் அதிக பயன் அளித்திருக்க முடியும். இன்று கம்பராமாயணத்தைத் தெரிந்திராத தமிழர் யார்? சீதாபிராட்டியின் கற்புநெறி பற்றியும் கற்பின் உயர்வுபற்றியும் அறியாத தமிழர் யார்? ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் இராமாயணத்தையும் சீதாதேவியையும் தெரியும். இருந்தபோதிலும், அத்தனை தமிழ்ப் பெண்களும் கற்புநெறி வழுவாதிருக்கின்றனரா?

ஒரு தடவை தன்மகளைச் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தாள் ஒரு தாய் யுவதியைச் சோதித்தேன். மகள் வயிற்றில் கரு வளர்வதாகவும், வேறு நோய் ஒன்றும் இல்லையென்றும் தாயாரிடம் கூறினேன். மாருக, தாய் என்மீது பாய்ந்தாள். சீதைபற்றியும் இராமாயணம்பற்றியும் அந்த யுவதி அறிந்திராள் என்று கூறமுடியுமா?

இலக்கியம் சமுதாயத்தின் கண்ணுடி. சமூகத்தின் நிறைகளையும் குறைகளையும் அப்படியப்படியே படம் பிடித்துக் காட்ட வல்லவனே இலக்கியகர்த்தா. பாண்டு நோயால் பீடிக்கப்பட்ட குழந்தையையும், காசநோயாளியையும் படம்போட்டுக் காட்டுவதன் மூலம் அந்நோய்களின் கெடுதல்பற்றிப் பிரசாரம் செய்யப்படுவதை நாம் அறிவோம். கற்புநெறி தவறிய ஒருத்தி கெட்டழிந்து போன கதையைக் கம்பன் எழுதியிருந்தால், அது சமூகத்துக்கு இன்னும் அதிக பயன் தந்திருக்கும்.

- நந்தி

### பண்டிதமணியும் இரசிகமணியும்

பண்டிதமணியின் நிழலில் நான் நிற்பதாகப் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இது வேதனை தருவதாகும். பண்டிதமணி மலைஎன்றுல், நான் மடு. அத்தனை வித்தியாசம். நான் மிகச் சிறியவன். அவருடன் என்னைச் சேர்த்துக் கொள்வது பெரிய பாபமாகும்.

(இரசிகமணி கனக. செந்திநாதன் அண்மையில் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பேசியது.)

### பேசாத பேச்சு

ஈழத்தமிழ் எழுத்துலகில் 'இலக்கிய சாம்ராட்' எனஅழைக்கப்படும் ஒருவர், ஈழத்தமிழிலக்கியத்தைப் புதியதொரு பாதைக்கு இட்டுச் செல்ல முனைந்திருப்பதாக, இலக்கியவட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது இலக்கியத்தில் எல்லா அம்சங்களையும் வெகு அநாயாசமாகத் தொட்டுவிடக் கூடிய இவர், ஈழத்தமிழ் எழுத்தாளர்களைப் புதிய கோணத்துக்கு அழைத்துச் செல்கிருராம். இதற்கு இருவிதமான காரணங்களும் கூறப்படுகின்றன. ஏற்கனவே வெளிவந்த தமது 'நிர்வாண இலக்கியத்துக்கு'ப் பலம் தேடுவது, ஒன்று. ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் 'நிர்வாண இலக்கியங்களை' நடமாட விடுவதன் மூலம் புதியதோர் 'மறுமலர்ச்சி'யை ஏற்படுத்தி, அம் 'மறுமலர்ச்சி'யின் தந்தையாகத் தாம் விளங்க வேண்டுமென்ற ஆசை, இரண்டாவது காரணம். அண்மையில் வெளிவந்த சில நூல்கள் இதற்குச் சான்று என்றும், அந்நூலாசிரியர்கள் இந்த எழுத்தாளருடன் மிகநெருங்கிய தொடர்புடையவர்கள்என்றும் கூறப்படுகிறது.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.''

### வளரும் இலக்கியம்

கடந்த வருடம் வெளிவந்த ஒரு சிறுகதை நூலில் கீழ்க்காணும் வசனத்தைக் காணலாம்:

''அமைதி குடிகொண்டிருந்த கோடு. மூச்சுவிடுவதுபோல் மறுபடியும் இப்போதுதான் மெல்ல ஆசுவாசப்பட்டுக் கொண்டது.''

இது என்ன தமிழோ! எல்லாருமே இப்படி எழுதத் தொடங்கிவிட்டால் தமிழுக்குப் புதியதோர் அகராதி எழுத வேண்டியதுதான்! எழுத்தாளர்கள் சற்றே நிதானமாக எழுதுவார்களாக

- அகராதி

# க த ம் ப மா லை

## வள்ளுவர் விழா

### யாழ். இலக்கிய வட்டம் கொண்டாடும்

யாழ். இலக்கிய வட்டம் திருவள்ளுவர் விழாவை எதிர்வரும் திங்கட்கிழமை கொண்டாடுகின்றனர். யாழ்ப்பாண மாநகரசபையின் பொழுது போக்குச் சங்க மண்டபத்தில் விழா நடைபெறும். இவ் விழாவில் திருவள்ளுவர் கவியரங்கு, கருத்தரங்கு முதலியன இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

1-வது மாணவன்: டேய், உனக்குச்சங்கதி தெரியுமோ?

மற்றவன்: அது என்னடா?

1-வது மா: எங்கள் வகுப்பில் மகாபாரதத்தை எழுதியவர் யார் என ஆசிரியர் கேட்டதற்கு, ஒரு மாணவன், 'கம்பன்' என்றுனடா!

மற்றவன்: ப்பூ, இதென்னடா வேடிக்கை எங்கள் வகுப்பில் 'இராமாயணத்தைத் தமிழில் இயற்றியவர் கம்பன் என்றுனே ஒருவன்!

— உமா-ஏழாலை

## தேநீர் விருந்து

எழுத்தாளரும் டாக்டருமான 'நந்தி' தம்பதிகளுக்கு முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ். கிளையினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஒரு தேநீர் விருந்தளிக்கின்றனர்.

## 10-6-66

மாணவ. மாணவிகளுக்காக 'விடி வெள்ளி, நினைவு மன்றம் நடாத்தும் கட்டுரைப் போட்டி முடிவு திகதி 10-6-66 ஆகும். கட்டுரையின் தலைப்பு:

## எது வாழ்வு

கட்டுரை 'பூல்ஸ்கா' தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படல் ஆகாது. தாளின் ஒருபக்கத்திலேயே எழுதப்படல் வேண்டும். கட்டுரை அனுப்புபவர், தம் சொந்த ஆற்றலினுல் எழுதப்பட்டதென்பதைக்கல்லூரி அதிபர் அல்லது பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். வயதுக்கட்டுப்பாடு இல்லை.

தெரிந்தெடுக்கப்படும் முதல் மூன்று கட்டுரைகளுக்கும் பணமும் புத்தகங்களும் பரிசாக வழங்கப்படும்.

கட்டுரை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், 'சிறுவர் பூங்கா' ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

## ஏடு நிறுவனம் தீர்மானம்

ஏடு நிறுவன உறுப்பினர்கள் அண்மையில் தெல்லிப்பளையில் கூடி தமது அடுத்த வெளியீடுபற்றித் தீர்மானித்தனர். தகுந்த பரிசிலனையின் பின் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல நூல்களையே எதிர்காலத்தில் ஏடு நிறுவனம் வெளியிடவேண்டுமென்று திரு. வ. அ இராசரத்தினம் வேண்டிக்கொண்டார். பெரும்பான்மை அங்கத்தவர்களும் இதை வலியுறுத்தினர்.

திருவாளர்கள்: எம். ஏ. ரஹ்மான், எஸ் பொன்னுத்துரை, இரசிகமணி கனக. செந்திநாதன், வ. அ. இராசரத்தினம், ஏ. ரி. பொன்னுத்துரை, கவிஞர்கள் 'அம்பி', வி. கந்தவனம் உட்படப்பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமது 2-வது வெளியீடாக திரு. எஸ். பொன்னுத்துரையின் குறுநாவல் ஒன்றை வெளியிடுவதென முடிவு செய்தனர்.

'கதம்பமாலை' ஒவ்வொரு போயா தினத்துக்கும் அடுத்தநாள் வெளிவரும். இலக்கிய சம்பந்தமான செய்திகள், புதிர்கள் மற்றும் இலக்கியக் கட்டுரைகள் கதம்பமாலையில் இடம்பெறும். சுவையான விஷயதானங்களை எழுதி அனுப்புமாறு 'கதம்பமாலை' அன்புடன் வேண்டிக்கொள்கிறது. புதியஅம்சமான 'கதம்பமாலை'யை வாசகர்களும் எழுத்தாளர்களும் வரவேற்பார்களென நம்புகிறோம்.

'கதம்பமாலை', மே./பா. 'ஈழநாடு', த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

## எழுத்தாளர் கருத்து

இலக்கிய நண்பர்கள் சங்கம் அண்மையில் தெல்லிப்பளையில் கூடியபோது, சாகித்தியப்பரிசுபெற்ற சிறுகதை ஆசிரியர் திரு. வ. அ. இராசரத்தினமும் கலந்து கொண்டார்.

1955-1965 என்றஇடைப்பட்ட காலத்தில் சிறுகதையுலகில் வசன நடை அழகு முக்கியத்துவம் இழந்துவிட்டதென்றும், கிராமிய கொச்சை வார்த்தைகளை அப்படியே கையாளுவதுதான் இலக்கியத்துக்குச் சிறப்பாகுமெனப்பெரும்பான்மையானவர்கள் கருதுகிருர்களென்றும் திரு. இராசரத்தினம் கூறினுர்.

# நவீன 'தமிழ்-தமிழ் அகராதி'

தமிழ்மொழியில் அடங்காத பற்றுடையவர் ஸ்ரீமான் 'தமிழ்முனி'. அன்னுர் தமிழ்மொழிக்குத் தமது பங்கையும் இயற்றுவான்வேண்டி, நம் பிற்சந்ததியாரின் பயன் குறித்தும், தமிழ்மொழியின் நலன் கருதியும் 'தமிழ்-தமிழ்-அகராதி' ஒன்றினைத் தயாரித்து அச்சுவாகனமேற்ற ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் வேளை அவருக்கு ஓர் அபூர்வ யோசனை தோன்றவே முயற்சியைச் சிலகாலத்துக்குத் தள்ளிவைத்துவிட்டார். நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவரும் 'தமிழ்ச் சொற்களை' இன்னும் சில காலம் பொறுத்திருந்து சேகரித்து இன்னும் அதிக சொற்களுடன் அகராதியை வெளியிடுவதே, தமிழ் முனியின் யோசனை. அவர் இதுவரை சேகரித்துள்ளவற்றில் சில சொற்களையும் அர்த்தங்களையும் தெரிந்துகொள்ள அபிமானிகள் ஆசைப்படுவார்கள் அல்லவா? அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| றேடியோ | - வானெலி. |
| சைக்கிள் | - துவிச்சக்கரவண்டி. |
| பேப்பர் | - தாள். |
| பென் | - பேனு. |
| டீ | - தேயிலை, தேநீர். |
| லவ் | - அன்பு, காதல். |
| பஸ் | - ஆட்களை ஏற்றிச்செல்லும் இயந்திர வண்டி. |
| பேர்ஸ் | - பணம் வைக்கும் பை. |
| ஷேர்ட் | - ஆண்கள் அணியும் மேல்சட்டை. |
| கவுண் | - பெண்கள் அணியும் நீளச் சட்டை. |
| சாறி | - சேலை. |
| மணி | - பணம், ஆலயங்களிலும் காரியால மேசைகளிலும் சைக்கிள்களிலும் இருந்து 'டாண்' என்றும், 'டிரிங்' என்றும் ஓசை எழுப்பும் உருக்கினுலான ஒரு பொருள். |
| பல்ப் | - மின்விளக்குக் குமிழி. |
| டியூப் | - வாகனங்களின் சக்கரம் இலேசாக உருள்வதற்கு அதன்மேல் இடப்பட்டுள்ள காற்று நிரப்பும் பை. |
| டயர் | - வாகனங்களின் சக்கரங்களில் டியூப்பைப் பாதுகாக்கும் பொருள். |
| கீ | - திறப்பு, ஏமாற்று. (கீ விடுதல்-ஏமாற்றுதல்) |
| புரோக்கர் | - தரகர். |
| எம். பி. | - பாராளுமன்ற உறுப்பினர். |

தொகுப்பு: கரிக்குருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் நாட்டில் திரைப்பட தொழிலுக்கு ஆபத்து"

## நடிகர் தங்கவேலு தகவல்

கொழும்பு, செவ்வாய்
"தமிழ்நாட்டில் திரைப்படத் தொழிலுக்கு பெரும் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இது மட்டுமல்லாமல் தென்னிந்திய சினிமா நடிகர்களுக்குப் போதியளவு ஊதியம் கொடுக்கப்படுவதில்லை" என இலங்கை வந்துள்ள ஹாஸ்ய நடிகர் திரு. கே. ஏ. தங்கவேலு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்தார்.

மிகக் குதூகலத்துடன் காணப்பட்ட திரு. தங்கவேலு தமக்கு இப்பொழுது சினிமாத் துறையில் விட, நாடகத்துறையிலேயே அதிக ஈடுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

### பணமுடை காரணம்

1955-ம் ஆண்டுவாக்கில் தென்னிந்தியாவில் 168 திரைப்படக் கம்பனிகள் இருந்தன. ஆனால் இப்பொழுது பத்தே பத்துக் கம்பனிகள்தான் இருக்கின்றன என்று வருத்தத்துடன் கூறினார் தங்கவேலு. பணமுடையே தென்னிந்தியாவில் சினிமாத் தொழிலுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள கதிக்குக் காரணம் என்றும் முதலாளிகள் வேண்டாத செலவுகளுக்கு அதிகப் பணத்தைச் செலவிடுவது பற்றியும் நடிகர்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுப்பதுபற்றியும் ஹாஸ்ய நடிகர் தங்கவேலு தெரிவித்தார்.

தான் நடித்த 13 படங்கள் முற்றுகப் படமெடுக்கப் பணமில்லாமையால் அரைகுறையில் இருக்கும் பரிதாபத்தை அவர் நிருபர்களிடம் கூறினார்.

### 'கலைவாணர் என் குரு'

ஹாஸ்ய நடிப்புத்துறையில் தனக்கு ஆர்வத்தையூட்டியவர் கலைவாணரே என்றும் அவர்என்றென்றும் தன்னுடன் வாழ்ந்துவருவதாகவும் திரு. தங்கவேலு குறிப்பிட்டார். தான் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியைக் கழற்றி கலைவாணர் அளித்த பதக்கத்தை மிகப் பெருமிதத்துடன் காட்டினார் அவர். 9 வயதிலேயே நடிக்க ஆரம்பித்த தனக்கு கலைவாணர் அளித்த உற்சாகமே தன்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்ததென்றும் அவரே தனது குருவென்றும் திரு. தங்கவேலு தெரிவித்தார்.

இலங்கையில் வெவ்வேறு இடங்களிலும்தான் நாடகங்களை மேடையேற்றப் போவதாகவும் இலங்கையில் உள்ள தனது ரசிகர்கள் அவற்றுக்கு வருகை தந்து தன்னை ஊக்குவிப்பார்கள் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

## 50 நாடுகளுக்கு இந்திய உடை

புதுடில்லி, ஜூன் 2
சென்ற ஆண்டு ரூ. 330 லட்சம் பெறுமதியான இந்திய உடுப்புக்கள், 50 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாய் அறிவிக்கப் பட்டது.

---

## எழுதுவினைஞர் மகாநாடு

வல்வெட்டித்துறை, வியா
ஸ்தல ஸ்தாபன எழுதுவினைஞர் சங்கத்தின் வருடாந்த மகாநாடு இவ்வருடம் காலியில் நடைபெறவிருக்கின்றது இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டிற்கு வல்வெட்டித்துறை பட்டின சபையிலிருந்து செல்லும் அங்கத்தவர்களுக்கு இலவச புகையிரத சீட்டுக்குப் பதிலாகபஸ் பிரயாணச் செலவை கொடுப்பதென்று பட்டின சபை அதன் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.


## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கி [illegible] வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு!
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

**தனதிகாரி,**
**தேர்த் திருப்பணிச்சபை,**
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்


## "கல்வித் துறையில் அதிக அக்கறை"

வவனியா, வெள்ளி
"தேசிய அரசாங்கம் வவனியா மாவட்டத்திலுள்ள கல்வி விஷயத்தில் கூடிய கவனமெடுத்து, பின்தங்கிய பகுதியாக உள்ள இப்பகுதிக்கு சகல உதவிகளையும் செய்துதர முன்வந்துள்ளது. 1963-ம் ஆண்டு எல்லாம் ஒலைக் கொட்டிலாகக்காட்சியளித்தும் 1963 ம் ஆண்டு தொடக்கம் 65-ம் ஆண்டு வரைக்கும் 27 லட்சம்ரூபா வவனியா மாவட்டத்தில் பாடசாலை திருத்துவதற்கும் பரிபாலன விஷயத்துக்கும் செலவு செய்யப்பட்டது.

இவ்வாறு நேற்று வவனியா தமிழ் மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் நடைபெற்ற வவனியா வித்தியாபகுதி மகாவித்தியாலய—மத்திய மகாவித்தியாலயங்களின் விளையாட்டுப் போட்டியில் விசேஷ விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வவனியா எம் பி திரு தா சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார். இந்தப் போட்டிக்கு வவனியா கல்வி அதிகாரி திரு ஞானசேகரம் தலைமைவகித்தார்.

---

## நெடுந்தீவுப் பிரயாணிகள் கஷ்டம்

நெடுந்தீவு, வியா.
நெடுந்தீவுக்கும், ஊர்காவற்றுறைக்குமிடையே பிரயாணிகளையும், தபால்களையும் ஏற்றிச் செல்லும் மோட்டார் வள்ளம் 'இராஜேஸ்வரி' நெடுந்தீவிலிருந்து ஊர்காவற்றுறைக்கு வந்து கொண்டிருக்கையில் எஞ்சின் கோளாறு ஏற்பட்டுவிட்டமையால் அதில் பிரயாணம் செய்தவர்கள் பெரும் பீதிக்குள்ளானார்கள்.

கொந்தளித்துக்கொண்டிருக்கும் கடலில் இப்படியான எஞ்சின் கோளாறுகள் ஏற்படுமானல் பிரயாணிகளின் நிலை பரிதாபத்துக்கிடமாகின்றது. இம்மோட்டார் வள்ளம் பழுதடைந்ததால் இதற்குப்பதிலாக வேறு வள்ளம் சேவையில் ஈடுபடுமோ என்ற ஏக்கத்தால் பலர் தங்கள் நெடுந்தீவுப் பயணத்தைப் பின்போட்டுள்ளார்களென அறியப்படுகிறது. இக்கொந்தளிப்புக் கடலில் போகக்கூடிய மோட்டார் வள்ளம் 'சில்வர்ஸ் பிறே' மட்டும்தான் என்பதும் அதில் 40 பிரயாணிகள் தான் பிரயாணம் செய்ய முடியுமென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நாள் ஒன்றுக்கு சராசரி 100 பேர் நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்குமிடையில் பிரயாணம் செய்துவருகின்றனர்.

---

## புதிய முறை

கொழும்பு, வியாழன்
சுகாதார சேவை சட்டத்தின்கீழ் ஆஸ்பத்திரி சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர் ஸ்தலஸ்தாபன மன்றங்களின் தலைவர்கள் அரசினர் ஆஸ்பத்திரிகளின் உத்தியோகபற்றற்ற பார்வையாளர்களாக இருக்கமுடியாதென உள்ளூராட்சி அதிகாரி எல்லா ஸ்தலஸ்தாபன மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஆஸ்பத்திரி சபைகள் கொழும்பு மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கும் மாகாணங்களிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க




வவனியா

## தமிழ் மகாவித்தியாலயம் முதலிடத்தை பெற்றது

### மெய்வல்லுநர் போட்டிமுடிவுகள்

வவனியா, வியாழன்
வவனியா வித்தியாபகுதி பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் வவனியா தமிழ் வித்தியாலயம் முதலாவதாக வெற்றிபெற்றது. இரண்டாவது இடத்தை காமினி சிங்கள பாடசாலையும், 3வது இடத்தை ஓமந்தை தமிழ் மகா வித்தியாலயமும் நான்காவது இடத்தை வித்தியானந்தா கல்லூரியும் பெற்றன.

பெண்கள் பிரிவில் முதலாவது இடத்தை வவனியா தமிழ் வித்தியாலயமும், இரண்டாவதும் இடத்தை ஓமந்தை தமிழ் மகாவித்தியாலயமும், மூன்றுவது இடத்தை காமினி சிங்கள பாடசாலையும், நான்காவது இடத்தை வித்தியானந்த கல்லூரியும் பெற்றன

ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் சாம்பியன் இடத்தைத் வவனியா தமிழ் மகாவித்தியாலயம் பெற்றுகொண்டது கடந்த வருடத்திலு பார்க்க இவ்வருடம் பல புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

இப்போட்டிகள் வவனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி ரி. சிவசிதம்பரம் பரிசில்களை வழங்கினர் உடற்பயிற்சி வித்தியாதிகாரி திரு வி. தங்கராசா, இப்போட்டிக்கான ஏற்பாடுகளை செய்தார்.

---

## இந்துப் பல்கலைக் கழகத்தில் இசைக்கலைப் பிரிவு

### நுண்கலைக்கழக இசைவிழாவில் திரு. ஜி. ஜி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி
'யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டதும்இசைக்கலையின்வளர்ச்சிகாக அதில்இசைக்கலைப் பிரிவுஒன்றும்நிறுவப்படும்' என்று யாழ்ப்பாணம் எம். பி யும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி ஜி பொன்னம்பலம் யாழ்ப்பாணம் நுண்கலைக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் இசைவிழாவின் முன்றும் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்

வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவல் முன்றலில் நடைபெற்றுவரும் இவ்விசை விழாவில் திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில், இந்துப்பண்பாடு, கலைகள், தத்துவம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு இந்துப் பல்கலைக்கழகத்தில் தனிப்பிரிவுகளிருக்குமென்று கூறினார்.

திரு. பொன்னம்பலத்தை வரவேற்று நுண்கலைக்கழகத் தலைவர் திரு. து. சீனிவாசகம் பேசுகையில், இப்பொதுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்திலேயே இசைக்கலைப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்த திருபொன்னம்பலம்முதலில் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

நுண்கலைக்கழகஇசைவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகளுடன் முடிவடைகிறது.

### இன்றைய நிகழ்ச்சிகள்

5-00 மேளம்— திரு என் கே பத்மநாதன் கோஷ்டியினர், 6-15 டாக்டர் கெங்காதரன்—புல்லாங்குழல், 7-30 செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன்—செல்வி இராஜலக்ஷ்மி ஜெகநாதன்—பாட்டு, 8-30 திண்மையுரை—கலாநிதி எச் டபிள்யு தம்பையா, 8-45 திருமதி சத்தியபாமா இராஜலிங்கம்—பாட்டு, 10-00—11-15 திரு ஏ ஜி ஐயாக்கண்ணுதேசிகர்—பாட்டு, 11-15 கண்ணன் கோஷ்டியார்—மெல்லிசை

---

சண்டிருப்பாயில்

## பாடசாலை 'கெயர்' மாவு பேக்கரியில் பிடிபட்டது

யாழ்ப்பாணம், வியா.
சங்கானைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து சண்டிருப்பாயிலுள்ள பேக்கரி ஒன்றில் 300 ருத்தல் 'கெயர்' மாவை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்

இளவாலை ஹேமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையிலுள்ள ஒரு அறையிலிருந்து இந்த 'கெயர்' மாவை யாரோ சிலர்திருடிச் சென்றதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இம்மாவு இப்பொழுது கைப்பற்றப்பட்டுள்ளது

இதுசம்பந்தமாக கார்ச்சாரதி சவுந்தரநாயகம், பேக்கரி மனேஜர் அப்புஹாமி ஆகியோர் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். பெரியவிளானைச் சேர்ந்த செல்வேந்திரன் என்பவரை பொலிசார் தேடிவருகின்றனர். (ந. தீ.)

---

## சிரமதான மூலம் வீதி திருத்தப்பட்டது

வல்வெட்டித்துறை, வியா
இமையாணன்கிராம முன்னேற்ற சங்க அங்கத்தவர்கள், இளைஞர்கள் ஆகியோர் சங்கத்தலைவர் திரு. க. வீரவாகு தலைமையில் கலட்டிப் பிள்ளையார் ஆலய வீதியையும் அதன் அருகாமையிலுள்ளதெரு வொன்றையும் சிரமதானமுறையில் திருத்தி அமைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் தட்டெழுத்தாளர் பிரச்னை திறைசேரியால் தீர்க்கப்படும்'

யாழ்ப்பாணம், வியா

புதிதாக அரசாங்க சேவையில் சேர்த்துள்ள தமிழ் தட்டெழுத்தாளர்கள் மூன்று ஆண்டுகளுக்குள் எட்டாம் வகுப்புச் சிங்களப் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் சம்பள உயர்வும் பதவி உறுதிப்படுத்தலும் வழங்கப்பட மாட்டாதென அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ் மொழிமூலம் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு பதவி உயர்வு, பதவி உறுதிப்படுத்தல் முதலியன வழங்கப்பட வேண்டுமென கடந்த அரசாங்கத்தால் முடிவுசெய்யப் பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்மொழி மூலம் தமிழ் தட்டெழுத்தாளர் தமிழ் சுருக்கெழுத்தாளர்பதவிகளுக்கு குறித்த சலுகைகளை அளிப்பதற்கு சிங்கள மொழித் தேர்ச்சியைக் கட்டாயமாக்குவது நியாயமற்றதென தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் சங்கம் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி செல்வநாயகத்திற்கும் உள்ளூராட்சி அமைச்சர் திரு மு திருச்செல்வத்திற்கும் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து '1965ம் ஆண்டு யூலை மாதம் கூடிய மந்திரி சபையின் தீர்மானத்தில் உங்களது விடயம் இடம் பெற்றுள்ள மந்திர்சபையின் குறித்த தீர்மானம் திறைசேரி சுற்று நிருபமாக வரும்போது உங்களது பிரச்னை தீர்க்கப் படும்' என திரு செல்வநாயகம் தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் சங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

## சர்வதேச நிதி ஸ்தாபன உதவி

கொழும்பு, வியாழன்

வரவுசெலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை சர்வதேச நாணய நிதி ஸ்தாபன உதவி மூலம் பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய சபை இலங்கைக்கு 780 லட்சம் ரூபாய் வழங்க பொறுப் பேற்றிருக்கிறது. இதில் 420 லட்சம் ரூபாய் இதுவரை கிடைத்திருக்கிறது. இம்மாதம் 15-ம் திகதிக்குப் பின் ஓராண்டில் மிகுதித்தொகை கிடைக்கும்.

# அமெரிக்க விண்வெளிக் கலம் சந்திரனில் இறங்கியது!

## முதல் அமெரிக்கர் இறங்க ஏற்ற இடத்தை தெரிவுசெய்யுமாம்

### இதுவரை அனுப்பிய படங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை

கேப்கென்னடி, ஜூன். 2

அமெரிக்க சர்வேயர் விண்வெளிக்கலம் திட்டமிட்டபடி சந்திரனில் மெதுவாகப் போய் இறங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இன்று பகல் 11-47க்கு அது சந்திரனில் இறங்கியது.

சந்திரனுக்கு 60 மைல் தூரத்தில் இருந்தபோது, அதன் வேகத்தை குறைக்க ராக்கெட் ஒன்று சுடப்பட்டது. சந்திரனை அடைய இருந்தசமயம் அது சமிக்ஞைகளைப் பூமிக்கு அனுப்ப ஆரம்பித்தது. சந்திரனை அடைய 20 நிமிடங்கள் இருக்கும்போதே அதன் மேற்பரப்பைப் படம்பிடித்தனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பல லட்சக்கணக்கான மக்கள் இதை டெலிவிஷனில் கண்ணுற்றனர்.

சந்திரன் பூமியிலிருந்து சுமார் 2,40,000 மைல் தூரத்தில் இருக்கிறது. 620 ரூத்தல் எடையுள்ள இந்தக் கலம் இறங்கிய 35 நிமிஷத்தில் அனுப்பிய படங்கள் அவ்வளவு தெளிவாக இல்லையென்று கூறப்பட்டது.

சந்திரனில் வெற்றிகரமாக இறங்கிய இரண்டாவது கலம் இது. இவ்வாண்டு பெட்ரவரி 9ந் தேதி ரஷ்ய 'லூனா 9' கிரகம் முதலில் சந்திரனை அடைந்தது.

முதலாவது அமெரிக்கர் சந்திரனில் இறங்குவதற்கு ஏற்ற இடத்தைத் தெரிவு செய்வது இதன் வேலையாகும்.

சந்திரனின் உக்கிரமான சூட்டைத் தாக்குப்பிடிக்க ஏற்ற சாதனங்கள் இந்தக் கலத்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன.


## திருமண அழைப்பு

**ஜெயறட்ணம் — இந்திராணி**

நிகழும் 1966-ம் ஆண்டு ஜூன்மாதம் 5-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-80 தொடக்கம் 8-30 வரை வரும் சுபமுகூர்த்தத்தில், காலஞ்சென்ற பருத்தித்துறை டாக்டர் இ. விசுவலிங்கம் அவர்களின் புதல்வன், செல்வன் ஜெயறட்ணத்திற்கும் கிளிநொச்சி அ. சிவசுந்தரம் அவர்களின் புதல்வி, செல்வி இந்திராணிக்கும் திருக்கேதீஸ்வர சிவாலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

அ. சிவசுந்தரமும், பாரியாரும்.


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 3ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

கிரிக்கெட் டெஸ்ட் இல: 1

# கன்ஹை: 00

## மேற்கிந்தியா: 5|343

### ஹண்ட் 135; ஸோபர்ஸ் 83 ஓட்டங்கள்

மான்செஸ்டர், ஜூன் 2

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியின் முதல்தர துடுப்படி வீரர் ரோயன் கன்ஹை, ஓட்டமெதுவும் எடுக்காமலே ஆட்டமிழந்தது இன்று இங்கு ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் ஒரு முக்கிய அம்சமாகும். முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் முதல் நாளான இன்று மேற்கிந்திய கோஷ்டி ஆட்ட நேரம் வரை 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 343 ஓட்டங்கள் எடுத்தது

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியே இன்று முதலில் துடுப்பெடுதாடியது

### ஆட்டமிழந்தவர்கள் விபரம்

மேற்கிந்திய கோஷ்டியில் இன்று ஆட்டமிழந்தவர்கள் விபரம்: நேர்ஸ், ஹண்ட் 135, கன்ஹை 00, புச்சர் 74. ஸோபர்ஸ் 83 (ஆட்டமிழக்கவில்லை)

மேற்கிந்திய கோஷ்டி இன்று தனது முதல் இன்னிங்ஸ் விளையாடத் தொடங்கியதும் வீரர் கன்ஹை ஓட்டமெதுவுமெடுக்காமல் ஆட்டமிழந்தது ஒரு துரதிஷ்டமாகவே அமைந்திருந்தது. ஆனால் ஹண்ட், பந்துகளை விளாசித்தள்ளி நூறு ஓட்டங்களை இன்று எடுத்தது- இக் கோஷ்டிக்கு புத்துயிரை அளித்துவிட்டது. ஹண்ட் மொத்தம் 14 பவுண்டரிகளை இன்று அடித்தார்.

தேநீர் இடைவேளை வரை 4 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 216 ஓட்டங்களை எடுத்திருந்த மேற்கிந்தியா, ஆட்ட நேர இறுதி வரை 5 விக்கட்டுகளை இழந்து மொத்தம் 343 ஓட்டங்களை எடுத்தது. இன்றைய ஆட்டத்தில் ஹவுண்ட், ஸோபர்ஸின் அபார ஆட்டம் பாராட்டக்கூடியது.

இங்கிலாந்து கிரிக்கெட் காப்டனான ஸ்மித் பிடித்த பந்தினால் ஹண்ட் ஆட்டமிழந்திருந்தார். ஹண்ட்டும் ஸோபர்ஸுமே இன்று அதிகமான (135, 83) ஓட்டங்கள் எடுத்தனர்.

---

## "டனல்" தங்கவேலு 9-ல் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஹாஸ்ய நடிகர் 'டனல்' கே. ஏ. தங்கவேலு எம். சரோஜா கோஷ்டியினர் இம்மாதம் 9-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார்கள். மூன்று தினங்கள்வரை இங்கு தங்கியிருக்குமிவர்கள், யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் மூன்று ஹாஸ்ய நாடகங்களை நடத்துவார்கள். கன்னாதிட்டி காளிகோவில் நிதிக்காக இந்த நாடகங்கள் நடைபெறுகின்றன.

---

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப்பிரசார சபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நடைபெறும்.

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மாள் தேவஸ்தானம், நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் தேவஸ்தானம், நீராவியடி கடையிற் சுவாமியார் தேவஸ்தானம்.

ஃ ஃ ஃ

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை "தடாதகைப் பிராட்டி" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நடைபெறும்.

## சுடுபட்டார்

சைகோன், ஜூன் 2

பிரபல பௌத்தத்தலைவர் ஒருவரை இனம் தெரியாத ஒருவர் சுட்டுக்கொன்றார் என்றும் அவர் வீதியில் நடந்துவந்தபோது சுடப்பட்டதாயும் கூறப்படுகிறது. மதப் பூசலைக் கிளப்புமுகமாக வியட்காங்கியர் இக்கொலைச்செயலைச் செய்திருப்பதாக ஆஸ்திரேலிய ரேடியோ அறிவித்தது.

---

## முத்துமாரி அம்மன் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணார்பண்ணை கில்னர்லேன் முத்துமாரி அம்மன் ஆலய உற்சவம் இன்றுமாலை அம்பாளுக்கு பண்டிக்கோடு விநாயகர் ஆலயத்தில் வேட்டையும் நாளை சனிக்கிழமை அம்பாளின் ரதோற்சவமும் ஞாயிற்றுக்கிழமை 4மணிக்கு அம்பாள் சந்நிதியில் தீர்த்தவிழாவும் திங்கட்கிழமை மாலை 6மணிமுதல் வசந்த உற்சவமும் நடைபெறும்.

தினமும் மாலை 7 மணி முதல் தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன் 'சிவலீலையும் சிவன் முத்தியும்' என்ற தொடரில் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

---

## எல்லாப் பிரச்னையும் தீரவில்லை

ஜாகர்த்தா, ஜூன் 2

இந்தோனேஷியாவுக்கும், மலேஸியாவுக்குமிடையே எல்லாப் பிரச்னைகளும் தீர்க்கப்படவில்லை என வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் கூறினார்.

---

## 'சைவச் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் கூறினேன். சமஷ்டி ஆட்சி ஏற்பட்டால் அல்லது தனித்தமிழ் நாட்டில் தான் தமிழ் சர்வகலாசாலை நிறுவ முடியுமேயொழிய ஒருபோதும் ஒற்றையாட்சியில் நிறுவ முடியாது" என்று திரு. தனபாலசிங்கம் கூறினார்.

அன்று திரு. பொன்னம்பலம், நடேசபிள்ளைக்கு பக்கபலமாய் நின்றிருந்தால் இந்துபல்கலைக்கழகம் எப்பவோ கிடைத்திருக்கும் என்றும் அவர் சொன்னார்.

### உள்நாட்டு அமைச்சின் வாசகசாலை

இரமநாதன் அக்கடமிதலைவர் திரு. எஸ். ஆர் கனகநாயகம் கூறியதாவது;

சமஷ்டியில் ஒரு பிரிவினர் வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாண கல்லூரியை பல்கலைக்கழகம் ஆக்க முயற்சி செய்கிறார்கள். அதற்கு முன்னோடியாகத்தான், உள்நாட்டு அமைச்சினால் மாகாணங்கள் தோறும் நிறுவப்படவிருக்கும் வாசிகசாலையை வட்டுக்கோட்டையில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வட்டுக்கோட்டையிலும் யாழ்ப்பாணத்திலும் பெரும் வாசிகசாலைகள் உண்டு. வடமராட்சியில், பல பாடசாலைகள் இருந்தும் வாசிகசாலை கிடையாது. ஆதலால் அந்த வாசிகசாலையை பருத்தித்துறையில் நிறுவினால் தமிழ் மக்களுக்கு பலனுண்டு.

இராமநாதன் இந்துபல்கலைக்கழக பிரசாரக்குழுவில் கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. த. முத்துசாமிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள். திருவாளர்கள் செ, தனபாலசிங்கம், எஸ். யூ. சோமசேகரம், எஸ். ஆர் கனகநாயகம், பி. நாகலிங்கம், ரி. அருளம்பலம், எஸ். சிவபாதசுந்தரம், எம். ஏ. தியாகராசா. எஸ். முத்துவேற்பிள்ளை, வி கந்தசாமி. எஸ். சரவணமுத்து

# வல்வை பட்டினசபைத் தேர்தல் முடிவுகள்

வல்வெட்டித்துறை, வியா

வல்வெட்டித்துறை பட்டினசபை தேர்தல் நேற்று நடைபெற்றது. இத்தேர்தல் அமைதியாகவும் அசம்பாவிதம் ஏதுவுமின்றி நடைபெற்றது. ஐந்து வட்டாரத்திலும் 13 பேர் போட்டியிட்டனர். 3-ம் வட்டாரத்தில் திரு. சோ. சுந்தரலிங்கமும் 5-ம் வட்டாரத்தில் திரு. க. இரத்தினமும் கட்டுப்பணத்தை இழந்தனர். போட்டியிட்ட தற்போதைய தலைவரான திரு. சபாரத்தினமும் தற்போதைய உபதலைவரான திரு. நா. பாக்கியலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். கட்சிரீதியாக ஒருவரு போட்டிம் யிடவிற்லை

போட்டிமுடிவுகள்வருமாறு:

1-ம் வட்டாரம்: திரு. ந. சபாரத்தினம் 487, திரு ச அருளம்பலம்—151, மேலதிகம்—336.

2-ம் வட்டாரம்: திரு கி இரத்தினவேல்—365, திரு க. நாராயணசாமி—257 மேலதிகம்—108.

3-ம் வட்டாரம்: திரு. வி. இரத்தினவடிவேல் — 265, திரு. பெ. திருஞானசம்பந்தர்—204, திரு. சோ. சுந்தரலிங்கம்—9, மேலதிகம் 61.

4-ம் வட்டாரம்: திரு. க. அருமைச்செல்வம்— 298, திரு. சி. நவரத்தினம்—253 மேலதிகம்—45

5-ம் வட்டாரம்: திரு. நா: பாக்கியலிங்கம்—191, திரு. க. ஆறுமுகம்—88, திரு. ச. குமாரசாமி—65, திரு. க நவரத்தினம்—46, மேலதிகம்—103.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org